க்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka


விலை ரூபா: 6.00

# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை 19 | வெள்ளிக்கிழமை (02-05-2003) | தொலைபேசி 2223378 | ஒலி 134



தமிழ்த் தேசியத்தின் கூட்டு மேதினப் பேரணி நேற்று நல்லூரில் இருந்து ஆரம்பமாகியபோது எடுக்கப்பட்ட படங்கள் — படங்கள்: பவன்

# தமிழர் பிரதிநிதிகள் புலிகளே

# கூட்டு மேதினத்தில் பிரகடனம்

## யாழ். மத்திய கல்லூரியில் மாபெரும் பொதுக் கூட்டம்

(அலுவலக செய்தியாளரும், பிரதேச செய்தியாளர்களும்)

**யாழ். மாவட்டத்திலுள்ள பல்வேறு பொது அமைப்புக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், கூட்டுறவாளர்களும் இணைந்து நேற்று நடத்திய கூட்டு மேதினத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுச்சியுடன் கலந்துகொண்டு தமிழ் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தியதோடு யுத்தத்திற்கு எதிரான தமது மனக் குமுறல்களையும் வெளிப்படுத்தினர்.**

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் கூட்டு மேதின நாள் நிகழ்வுகள் நேற்று மாலை யாழ். மத்திய கல்லூரியில் பேரெழுச்சியுடன் நடைபெற்றது.

நல்லூரில் உள்ள தியாகி திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக இருந்து பிற்பகல் 3மணியளவில் பல்லாயிரக் கணக்கான மக்கள் புடைசூழ ஆரம்பமான பேரணி பருத்தித்துறை வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதியை வந்தடைந்து அங்கிருந்து மணிக்கூட்டு வீதி வழியாக யாழ். மத்திய கல்லூரியை சென்றடைந்தது.

நல்லூரில் ஆரம்பமான பேரணி யாழ். மத்திய கல்லூரியை வந்தடையும் வரை சமாதானத்தை குழப்பியடிக்க முயலும் சக்திகளுக்கு எதிராகவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தக்கோரியும் பேரணியில் கலந்துகொண்டோர் வானதிர கோஷங்களை எழுப்பினர்.

(10ம் பக்கம் பார்க்க)

# யாழ். பொதுநூலகம் 10-ம் திகதி திறக்கப்படும்

## பிரதமர் ரணில் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுநூலகம் எதிர்வரும் 10-ம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆடம்பரமற்ற முறையில் யாழ். மாநகரசபையின் பொதுநூலகத்தை திறந்து வைக்கவேண்டும் என ரணில் விக்கிரமசிங்கா விரும்புவதாகவும்:

இந் நூலகத்தை யாழ். மாநகர சபையின் ஆணையாளர் இ. இராமலிங்கம் உத்தியோகபூர்வமாக திறந்து வைப்பார் என்றும் தெரிய வருகிறது.

உலக இந்து மாநாட்டை ஒட்டி எதிர்வரும் 9-ம், 10-ம் திகதிகளில்

(10ம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் நடைபெறவிருந்த முன்னோடிமாநாடுஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவிருந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சமாதான செயலகப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அடுத்த மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னோடியான மாநாடொன்று கொழும்பில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

சமாதான முயற்சிகளில தற்போது ஏற்பட்டுள்ள மந்த நிலையை அடுத்து முன்னோடி மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெறவிருந்த இம் முன்னோடி மாநாட்டிற்கு இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகள், மற்றும் நிதிநிறுவனங்களும் அழைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை ஒத்திவைக்கப்பட்ட முன்னோடி மாநாட்டை மீண்டும் விரைவில் நடத்துவதற்காக அரசும் சமாதானச் செயலகமும் ஆலோசித்து வருவதாகவும் தெரியவருகிறது.

(வ)

## ஈழத்தமிழர் வாழும் நாடுகளிலும் மேதினம்

(சூரிச்)

தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள பல்வேறு அமைப்புக்களால் மேதின கொண்டாட்டங்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்து சூரிச்சில் இடம் பெற்ற இம்மேதின நிகழ்வில் விடுதலைப்புலிகள் உட்பட 13 விடுதலை

(10ம் பக்கம் பார்க்க)

கூட்டு மேதினப் பேரணியின் மேலும் சில காட்சிகள் 2-ம் பக்கத்தில்...

# நம்பியாரின் அறிக்கையின் பின்னரே மீள் குடியேற்றத்தில் முடிவு

## பாதுகாப்பு தலைமையகம் வலியுறுத்து

(கொழும்பு)

அதியுயர் பாதுகாப்பு வலய மீள் குடியேற்றம் தொடர்பான இந்திய முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியாரின் அறிக்கை இலங்கை அரசுக்குக் கிடைத்த பின்பே அதியுயர் பாதுகாப்பு வலய மீள் குடியேற்றம் தொடர்பான முடிவுகள் எடுக்கப்படுமென பாதுகாப்பு தலைமைச் செயலகம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

# புதிய படை முகாம் அமைப்பதற்கு விடுதலைப்புலிகள் கடும் எதிர்ப்பு!

## சு.ப. தமிழ்ச்செல்வன் ஒஸ்ரினுக்குக் கடிதம்

(கிளிநொச்சி)

யாழ். நகர மத்தியில் உயர் பாதுகாப்பு வலயம் அமைக்கும் படைத்தரப்பின் முயற்சிக்குப் தமது ஆழ்ந்த மனக் கவலையைத் தெரிவித்து விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த மாதம் 27-ம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தமிழ்ச்செல்வனுக்கு அனுப்பிவைத்துள்ள் கடிதத்திற்குப் பதிலாகவே சு.ப. தமிழ்ச்செல்வன் இக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தங்களது முன்னைய அரசியல் வரைபுக்கும், தற்போதைய அரசியல் வரைபுக்கும் இடையே கருத்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டு மேதினக் காட்சிகள் சில...



# பேச்சுவார்த்தையை இடைநிறுத்தும் முடிவை புலிகள் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## பிரதமர் ரணில் பாலாவுக்கு பதில் கடிதம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தும் விடுதலைப்புலிகளின் முடிவை மீள் பரிசீலனை செய்து மீண்டும் சமாதான முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைக் கோரியுள்ளார்.

கடந்த மாதம் 21ஆம் திகதி தாம் பேச்சுவார்த்தையில் இருந்து இடைவிலகுவதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பிரதமரிற்கு அனுப்பி வைத்த கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையிலே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 29ஆம் திகதி அன்ரன் பாலசிங்கத்துக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு,

அரசு-புலிகள் ஆகிய இரு தரப்பினரும் தத்தமது மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்கு தீவிரமாக முயற்சி செய்ய வேண்டும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ள ஆக்கபூர்வமான மாற்றங்களில் சிலவற்றை தங்கள் பார்வைக்கு கொண்டு வருகின்றேன்.

இரு தரப்பினரும் காட்டிய நேர்மை மற்றும் உறுதிப்பாட்டின் விளைவாக 14 மாத காலத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கை வலுப்படுத்தப் பட்டது.

அத்துடன், நாடு முழுவதிலும் சமாதானத்தையும், அபிவிருத்தியையும் நோக்கி குறிப்பிட்டதொரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மேலும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் நடைமுறைகள் பலப்படுத்தப்பட்டு செயற்பாடுகளும் பரப்பெல்லைகளும் விரிவுபடுத்தப்பட்டன.

முன்னைய நிலையின் கீழ் மோதல்களுக்கு வழிவகுக்கக் கூடிய நெருக்கடியான நிலைமைகள் தணிக்கப்பட்டு தீர்வு காணப்பட்டது.

இராணுவம் நிலைகொண்டிருந்த வழிபாட்டுத் தலங்களும், பாடசாலைகளும் சம்பந்தப்பட்டவர்களிடம் கையளிக்கப்பட்டன. இவ்வாறான பல விடயங்கள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டன.

அதேவேளை, வாஷிங்டன் மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாதமை குறித்து நாம் அதிருப்தி அடைந்துள்ள போதும் அந்நாடு பயங்கரவாதப் பட்டியலில் தங்களின் அமைப்பைச் சேர்த்துள்ளதால் அது தவிர்க்கப்பட வேண்டியதொன்றாகிவிட்டது.

அத்துடன், 14 மாத காலமாக அமுலில் இருக்கும் போர் நிறுத்தம் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வைத் தரும் என்ற நம்பிக்கை உள்ள நிலையில், வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு நடவடிக்கைகளின் மந்தமான முன்னேற்றம் பேச்சுக்களை நிறைவேற்றுவதற்கான காரணமாக இருக்கக் கூடாது.

மேலும் அதிஉயர் பாதுகாப்பு வலயம் குறித்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரி சதீஸ் நம்பியாரின் அறிக்கை எதிர்காலப் பேச்சுவார்த்தையில் கருத்தில் கொள்ளப்படும்.

இலங்கைக்கு புத்துயிர் ஊட்டுவோம் என்ற திட்டம் மூலம் நாட்டில் உள்ள அனைத்து இளைஞர் யுவதிகளுக்கும் வேலை. வாய்ப்பு வழங்கப் படும்.

வடக்கு-கிழக்கிற்கு நீண்ட கால அபிவிருத்திக்குத் தேவையான வளங்கள் விஸ்தரிக்கப்படும். இந்தப் பணிகளில் விடுதலைப் புலிகளின் கருத்துக்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

இந்த நடைமுறையில் இருந்து விடுதலைப்புலிகளை நீக்கும் எண்ணம் எமக்குக் கிடையாது என்றுள்ளது. (உ-10)

## தொழிலாளரைக் காப்பதே சமாதானத்தின் இலக்கு

### ஜனாதிபதி மேதினச் செய்தி

(கொழும்பு)



தொழிலாளர் சமூகத்தின் உரிமைகள் நாட்டின் ஏனைய சமூக சமயப் பிரிவுகளை சேர்ந்தோரது உரிமைகளுடன் பின்னிப்பிணைந்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேதினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்திக்குறிப்பில் மேலும், தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பது தான் சமாதான நடைமுறையின் இலக்காக இருக்க வேண்டும். அதற்காக அமைதி வழியில் அரசியல் தீர்வை அடைய வேண்டும்.

தொழிலாளர் வர்க்கம் தமது உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கான சவால்களை எதிர் நோக்கியுள்ளது.

மேதினத்தை விடுதலை தினமாக்கியது, ஊழியர் நம்பிக்கை நிதியம் உட்பட பல உரிமைகளைப் பாதுகாக்கும் முன்னேற்றகரமான சட்டங்கள் என்பன தொழிலாளர் வர்க்கத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்று குறிப்பிட்டுள்ளது. (உ-10)

## தொழிலாளரின் ஒத்துழைப்பு நாட்டைக் கட்டியெழுப்பும்

### பிரதமர் மேதினச் செய்தி


(கொழும்பு)

இலங்கையில் தொழிலாளர் வர்க்கத்தின் முழுமையான ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்தும் வெற்றி பெறும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள மேதினச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இலங்கையில் அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு அனைத்துத் துறைகளையும் சேர்ந்த உழைக்கும் மக்களின் ஒத்துழைப்புக் கிட்டியுள்ளது.



தொழிலாளர்கள் அர்ப்பணிப்போடும் பொறுப்போடும் இந்தக் கடமைகளை நிறைவேற்றுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-10)

## இழப்பீடு கோரி மனுத் தாக்கல்

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்ற உத்தரவின் பேரில் தற்போது கைது செய்யப்பட்டுள்ள ப்யூ யுவான் யூ-226 என்ற மீன் பிடிக்கப்பலின் உரிமையாளரிடமிருந்து 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களை இழப்பீடாக பெற்றுத் தரும்படி கோரி மனுவொன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுக் கடலில் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த கப்பலொன்றிற்கு இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் காயம்பட்டதுடன், தனது மனோநிலையும் பாதிக்கப்பட்டதாக அந்த நபர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தெமட்டகொடையைச் சேர்ந்த அனுரா பிரியந்த என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவில், ப்யூ யுவான் யூ-226 என்ற கப்பலின் உரிமையாளரை பிரதிவாதியாக குறிக்கப்பட்டுள்ளது. இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் மரணமடைந்ததாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மனு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரா ஏக்கநாயக்க முன்னிலையில் நேற்று முன்தினம் ஆராயப்பட்டபோது மனுவை ஆதரித்து கே.பி. என்னும் சட்ட நிறுவனத்தின் அனுசரணையுடன் சட்டத்தரணி தமயந்தி பிரான்சிஸ் ஆஜரானார்.

பிரதிவாதியை இம்மாதம் 19 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி அழைப்பாணை விடுக்கப் பட்டது. (உ)

## பேணாட்டின் இடத்திற்கு பல்லியகர நியமனம்

(கொழும்பு)

அரசாங்க சமாதானச் செயலகத்தின் புதிய பணிப்பாளராக ஜி.எல்.பல்லியகர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹொங்கொங்கிற்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றிய இவர் விரைவில் தனது புதிய பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இதேவேளை, இற்றைவரை சமாதானச் செயலகப் பணிப்பாளராகக் கடமையாற்றிய பேணாட் குணதிலக, வெளிவிவகார அமைச்சின் செயலாளராகப் பதவியேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## அரியாலை ஸ்ரீ பார்வதி பாடசாலையில் காணப்பட்ட மிதிவெடி அபாயம் நீங்கியது

(கல்வயல்)

அரியாலை தபால்கட்டைச் சந்திக்கு அருகாமையில் உள்ள கண்டி வீதியின் இரு மருங்கிலும் உள்ள மிதிவெடிகளை ஹலோ ட்ரெஸ்ற் நிறுவனத்தினர் அகற்றி வருகின்றனர்.

இதேவேளை, இவர்களால் ஏற்கனவே மிதிவெடிகள் அகற்றப்பட்ட அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் இம்மாதம் முதல் அதே இடத்தில் இயங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை மிதிவெடி அபாயம் உள்ளதால் இப்பாடசாலை மூடப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. (உ-36)

## புலிகளின் ஆதரவாளரான பொலிஸ்மா அதிபரை பதவி நீக்க வேண்டும்

### முன்னாள் பொலிஸ்மாஅதிபர் கோரிக்கை

(கொழும்பு)

பொலிஸ்மாஅதிபர் ரி.ஈ.ஆனந்த ராஜாவை பதவிநீக்கம் செய்ய வேண்டுமென்று, முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், சிஹல உறுமய கட்சியின் மத்தியகுழு உறுப்பினருமான கொட்டகதெனிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொலிஸ்மாஅதிபர் விடுதலைப் புலிகளின் பிரதான ஆதரவாளர். அவரைப் பதவியில்வைத்திருப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலொன்றும, உடனடியாகவே அவரைபதவிநீக்க வேண்டும்என்றும் அவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, நாட்டின்தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் விடுதலைப்புலிகளின் தற்கொலைபடையை புலிகள் கலைத்து விடவேண்டு மென்று, சிஹல்உறுமய வின் தலைவர் திலக்கருணாரட்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

இல்லையேல் தமது கட்சி உறுபினர்கள் அனைவரும் நாட்டின் பாதுகாப்புக்காக தற்கொலைட் போராளிகளாக மாறுவர் என்றுதிலக்கருணாரட்ன எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ)

## வெங்காயப் பயிரில் பழுப்பு நோய்

(நவக்கிரி)

அண்மையில் பெய்த மழை காரணமாக வெங்காயப் பயிரில் ஒரு வித பழுப்பு நோய் பரவி வருகின்றது.

பத்தமேனி, வளலாய், இடைக்காடு, ஆவரங்கால், சிறுப்பிட்டி பகுதி வெங்காயத் தோட்டங்களில் இந்நோயை அதிகம் அவதானிக்க முடிகிறது. (உ-233)

## மனிதவள அபிவிருத்திப் பயிற்சிநெறி

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் மனிதவள அபிவிருத்திப் பயிற்சி நெறியானது இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு பிப்பிலியில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களிற்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், கடிதம் கிடைக்காத விண்ணப்பதாரிகள் மேற்படி திகதியில் பயிற்சி நிலையத்திற்கு சமுகமளிக்குமாறும் பொறுப்பாசிரியர் கேட்டுள்ளார். (உ-258)

## கலந்துரையாடல்

(சண்டிலிப்பாய்)

வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர், திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

இந்த வகையில், எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். செயலகத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் என்பவற்றின் நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (உ-258)

## கொடியேற்றம்

(கல்வயல்)

அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளது. (உ-36)

## விவசாய உள்ளீடுகள்

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட விவசாய குடும்பங்களுக்கு தேவையான விவசாய உபகரணங்கள் மற்றும் விவசாய உள்ளீடுகள் என்பவற்றை பட்டினிக்கெதிரான நிறுவனம் வழங்கி வருகின்றது. (உ-36)

## விவசாய வீதி திருத்தம்

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலகத்தினரால் விடத்தற்பளை கிராம முன்னேற்றச் சங்க விவசாய வீதி விரைவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதனால் இப்பகுதியிலுள்ள சுமார் 400 விவசாயக் குடும்பங்களும் விவசாய நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ள உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-36)

# துருக்கி பூகம்பத்தில் 150 பேர் புதையுண்டு மரணம்

## 100 க்கும் மேற்பட்டோர் மாணவர்கள்

(அங்காரா)

துருக்கியில் நேற்றுக் காலை ஏற்பட்ட பாரிய பூமி அதிர்ச்சியால் 150 பேர் உயிரிழந்துள்ளனர். 300க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

பாடசாலைக் கட்டடம் ஒன்று முற்றாகத் தகர்ந்துள்ளது. இதில் 135 மாணவர்கள் புதையுண்டதாகவும் அவர்களில் 50 பேர் மீட்கப்பட்டு விட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. துருக்கியின் தென் கிழக்குப் பகுதியான பிங்கோவில் ஏற்பட்ட இந்த நில நடுக்கம் 6.4 ரிச்சர்ட் அளவாக பதிவாகியுள்ளது.

நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த பூமி அதிர்வு காரணமாக பெருமளவிலான கட்டடங்களும் நூற்றுக் கணக்கான வீடுகளும் சேதமடைந்துள்ளன.

கட்டடங்களின் இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியிருக்கலாம் என்றும் மீட்பு பணிகள் தொடருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பூமி அதிர்வு ஏற்பட்ட மலைப் பகுதியான பிங்கோல் மாவட்டத்தில் சுமார் 2 இலட்சத்து 54 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றனர்.

1999ஆம் ஆண்டு துருக்கியில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியினால் 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-2)

# பலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான புதிய திட்டம்

## அமெரிக்க-ரஷ்ய நாடுகள் சமர்ப்பிப்பு

(டெல்அவிவ்)

மத்திய கிழக்கில் இருந்து வரும் பலஸ்தீன-இஸ்ரேல் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றினைக் காணும் விதத்தில் புதிய சமாதானத் திட்டம் ஒன்றை அமெரிக்காவும் வேறு முக்கிய நாடுகளும் உருவாக்கியுள்ளன.

இத்திட்டத்தின் பிரதிகள் இஸ்ரேலிய அதிகாரிகளிடமும் பலஸ்தீன அதிகாரிகளிடமும் வழங்கப்பட்டுள்ளன.

2005ஆம் ஆண்டளவில் பலஸ்தீன தனிநாட்டை உருவாக்குதல் உட்பட பல்வேறு அம்சங்கள் இத்திட்டத்தில் அடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள், ரஷ்யா ஆகியவை சேர்ந்து உருவாக்கியுள்ள இத்திட்டம் மத்திய கிழக்கு சமாதானத்திற்கான வரைபு என்று கருதப்படுகின்றது.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனிடமும், பலஸ்தீன புதிய பிரதமரான மொகமட் அப்பாஸிடமும் இந்தத் திட்டத்தின் பிரதிகள் வழங்கப்பட்டுள்ளது. மொகமட் அப்பாஸ் நேற்று முன்தினம் புதிதாக பதவியேற்றமை இத்திட்டம் வெளியாகுவதற்கான ஒரு முக்கிய காரணமாக இருந்துள்ளது. இத்திட்டத்தின் நன்மை தீமைகள் பற்றி இரு அரசுகளும் ஆலோசித்து முடிவுகள் எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பலஸ்தீன தீவிரவாத குழுவான கமாஸ் இயக்கம் இத்திட்டத்தை ஏற்கனவே நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-2)

# 6 அல்கெய்டா தீவிரவாதிகள் பாகிஸ்தானில் கைது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான், அல்கெய்டா இயக்கத்தின் 6 உறுப்பினர்களைக் கைது செய்துள்ளது. கைது செய்யப்பட்டவர்களுள் ஜேமன் தேசத்தைச் சேர்ந்த ஒருவரும் உள்ளார் என்றும், 2000ம் ஆண்டு ஜேமன் கடற்பகுதியில் இடம்பெற்ற அமெரிக்க யுத்தக்கப்பல் மீதான தாக்குதலுடன் இவருக்கு தொடர்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்த போதே 6 பேரும் கைது செய்யப்பட்டதாக பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (பி-9)

# தமிழ் நாட்டில்

## சக கைதி மரணமடைந்ததை எதிர்த்து ஆயிரம் கைதிகள் உண்ணாவிரதம்

(புதுடில்லி)

சக கைதியொருவர் மரணமடைந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோவைச் சிறையில் ஆயிரம் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சுகயீனமுற்றிருந்த கைதியை உரிய நேரம் வைத்தியசாலைக்கு அழைத்துச் சிகிச்சையளிக்கவில்லை என்றும், அவ்வாறு சிகிச்சை அளித்திருந்தால் சக கைதி உயிரிழந்திருக்க மாட்டார் என்று கூறி ஏனைய கைதிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் சிறைச்சாலையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

# நேட்டோவுக்குப் புறம்பாக

## 4 ஐரோப்பிய நாடுகள் பாதுகாப்பு ஒப்பந்தம்

(பிறஸல்ஸ்)

பிரான்ஸ், ஜேர்மன், பெல்ஜியம் மற்றும் லக்சம்பேர்க் ஆகிய நான்கு ஐரோப்பிய நாடுகள் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளன.

பிறஸல்ஸ் நகரில் கூடிய இந்த 4 நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டின் இறுதியில் கூட்டறிக்கையொன்றினையும் வெளியிட்டுள்ளனர்.

நேட்டோவிற்குப் புறம்பாக ஐரோப்பிய பாதுகாப்பு கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய காலம் வந்து விட்டதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் கூட்டமைப்பு அவசியமற்றது என்று அமெரிக்காவும், பிரித்தானியாவும் தெரிவித்துள்ளது.

ஈராக் மீதான போரினால் கருத்து முரண்பாட்டிற்குள்ளாகியிருக்கின்ற ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான பிளவை இது மேலும் அதிகரிக்கும் என்று பிரித்தானிய படைத்துறை அமைச்சர் டேவிற் கோனும் மற்றும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவலும் கருத்து வெளியிட்டுள்ளனர். பிரான்ஸை ஓரம் கட்டும் அமெரிக்காவின் திட்டத்திற்கு இந்த 4 நாடுகளின் கூட்டமைப்பு சவாலாக அமைந்திருப்பதாக ஐரோப்பிய அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர். (பி-2)

# இந்திய பிரதமருக்கு முறையான அழைப்பு வரவில்லை

(இஸ்லாமாபாத்)

இந்திய பிரதம மந்திரிஅடல்பிகாரி வாஜ்பாய்க்கும், பாகிஸ்தான் பிரதமர் ஜமாளிக்கும் இடையே நிகழ்ந்த தொலைபேசி உரையாடலில் இந்தியப்பிரதமரை பாகிஸ்தான் வருமாறு அழைத்ததும் பேச்சுவார்த்தைக்கு விடுக்கப்பட்ட அழைப்புத்தான் என்று மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

இதுவிஷயமாக மேற்கொண்டு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதுள்ளதால் அழைப்பைமுறைப்பது குறித்தானகேள்விக்கே இடம் இல்லையென வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் ஒருவர் கூறினார்.

பாகிஸ்தானின் அழைப்பைத் தான் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை எனப் பிரதமமந்திரி தமதுகட்சி எம்.பிக்களிடம் கூறியதாக பீ.ஜே.பியின் செய்தித்தொடர்பாளர் வீகே.மல்கோத்திரா நேற்றுமுன்தினம் தெரிவித்ததைத் தொடர்ந்து புதுடில்லி இந்த விளக்கத்தை அளித்துள்ளது.

ஆனால் பிரதமமந்திரி பாகிஸ்தானின் அழைப்பை நிராகரித்து விட்டதாக பத்திரிகைகள் தவறாக அர்த்தப்படுத்திவிட்டன.

பாகிஸ்தானிடம் பேச்சுநடத்துவது தொடர்பான நடவடிக்கைகள் குறித்து அரசு ஒருஅறிக்கை வெளியிட வேண்டும் என்று மக்களவையில் பலஉறுப்பினர்கள் கோரினார்கள். நேற்று அவை அலுவல் தொடங்கிய உடனேயே பேசிய உறுப்பினர்கள் அரசின்முரண்பாடான அறிக்கைகள் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன என்று தெரிவித்தன.

பாகிஸ்தானுடன் பேச்சுநடத்துவதை நியாயப்படுத்தும் அளவிற்கு நடப்புநிலைமையில் எந்தமாற்றம் ஏற்பட்டுள்ளது என்று உறுப்பினர்கள அறிய விரும்பினார்கள். (பி-9)

# ஆயுதக்களைவை முழுமையாக மேற்கொள்ள ஐ.ஆர்.ஏ. தயார்

(பெல்பாஸ்ட்)

வட அயர்லாந்தில் அமைதிக்கான இறுதி முயற்சியாக ஐரிஷ் குடியரசு இராணுவம் (ஐ.ஆர்.ஏ) முழுமையாக ஆயுதக்களைவை மேற்கொள்ள விருப்பதாக மேற்படி தீவிரவாத குழுவின் அரசியல் பிரிவின் நேச அமைப்பான சின் பெயின் அறிவித்துள்ளது.

பிரிட்டிஷ் ஆளுகைக்குட்பட்ட வட அயர்லாந்தில் அமைதியைத் தோற்றுவிப்பதற்காக மேற்படி அமைப்பு வழங்கிய தனிப்பட்ட ரீதியிலான உறுதி மொழிகள் மிகவும் தெளிவற்றவையாகவிருப்பதாகக் கூறி பிரிட்டனும் தென் அயர்லாந்தும் அதனை நிராகரித்து விட்டிருந்தன. அதனால் அமைதி முயற்சிகளுக்கு தேக்கம் ஏற்பட்டிருந்தது. அத்துடன் ஐரிஷ் குடியரசு இராணுவம் வன் செயல்களை முற்றாகக் கைவிட வேண்டும் என்றும் இந்த நாடுகள் வற்புறுத்தியிருந்தன.

இந்த நிலையில் அண்மையில் பெல்பாஸ்டில் சின் பெயின் அமைப்பின் தலைவர் கெறி அடாம்ஸ் ஒரு கூட்டத்தில் பேசிய போது, இந்த இரண்டு அரசுகளுக்கும் ஐ.ஆர்.ஏ தெளிவான ஒரு அறிக்கையைக் கொடுத்திருப்பதாகவும், அதற்கு சாதகமான ஒரு பிரதிபலிப்பு அந்த நாடுகளிடமிருந்து கிடைக்குமானால் அது ஆயுதக் களைவை ஆரம்பிப்பதற்குத் தயாராய் இருப்பதாகவும் கூறியிருந்தார்.

அந்த அறிக்கையில் மிகவும் குறிப்பிடத்தக்கதான, முன்னர் முன்வைக்கப்பட்ட எந்தவொரு அறிக்கையிலும் காணப்படாத அம்சங்கள் இருப்பதாகவும், அது முற்றிலும் அமைதியை நோக்கமாகக் கொண்டது என்றும் கெறி அடாம்ஸ் கூறியிருந்தார்.

கெறி அடாம்ஸின் தலையீட்டை பிரிட்டன் வரவேற்றுள்ள போதிலும் புரட்டஸ்தாந்து அல்ஸ்ரர் யூனியன் கட்சியோ அவர் குறிப்பிட்டுள்ள அறிக்கையில் காணப்படுபவை போதுமானவையாக இல்லையென்று நிராகரித்துள்ளது. (பி)

# சார்ஸிற்கு 'ஜெயா' வின் மருந்து பப்பாளிப்பழமும் துளசி இலையும் சாப்பிட சொல்கிறார்!

(புதுடில்லி)

சார்ஸ் நோயினால் தமிழக மக்கள் அச்சம் கொள்ள வேண்டாம். இது ஒரு தொற்று நோய் அல்ல. இதற்கு பப்பாளிப்பழம், துளசி இலை என்பவற்றை உண்டால் சுகம் ஏற்படும் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மக்களிற்கு அறிவுறுத்தியிருக்கின்றார்.

இதேவேளை, இந்தியாவைச் சேர்ந்த நபர் ஒருவர் சிங்கப்பூரில் சார்ஸ் நோயினால் உயிரிழந்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் இருக்கும் பூர்னே நகரில் சார்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட தாயிற்கும் மகளிற்கும் சிகிச்சை மேற்கொண்ட 9 மருத்துவ ஊழியர்கள் சார்ஸ் நோய்க்கு உள்ளாகியிருக்கின்றனர். (பி-2)

# வேலைக்குறைப்பு, சம்பளவெட்டை எதிர்த்து

## இஸ்ரேலில் 7 இலட்சம் பேர் வேலை நிறுத்தப் போராட்டம்

(ரெல்அவிவ்)

7 இலட்சம் பொதுத்துறை தொழிலாளர்கள் கலந்துகொள்ளும் வேலை நிறுத்தத்தை நேற்று முன்தினம் இஸ்ரேலியர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக துறைமுகங்கள், விமானநிலையங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், வங்கிகள், வியாபார நிலையங்கள் என அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

இஸ்ரேலிய அரசு அறிவித்திருந்த 10 சதவீத வேலைக்குறைப்பு சம்பள வெட்டுக்கு எதிராகவே இந்த வேலை நிறுத்தம் மேற் கொள்ளப்படுவதாக சம்பந்தப்பட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதனால் வர்த்தக நடவடிக்கைகள் சீர்குலைந்து ஏற்றுமதித்துறை முற்றிலும் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக வர்த்தக நிறுவனங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலில் இடம்பெறும் மிகப் பெரிய வேலை நிறுத்தப் போராட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (பி-2)

# நெடுமாறன் உட்பட 6 பேர் பிணைகோரி மீண்டும் மனுத்தாக்கல்

(புதுடில்லி)

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறன் உட்பட 6 பேர் பிணை கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மீண்டும் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் இது தொடர்பாக விளக்கமளிக்குமாறு தமிழக அரசிற்கு கடிதம் அனுப்பியுள்ளது. தமக்கு பிணை வழங்குமாறு கோரி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இவர்கள் செய்த மனுவை பூந்தமல்லி பொடா சிறப்பு நீதிமன்ற நீதிபதி இராஜேந்திரன் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-2)

# பயங்கரவாத ஒழிப்பில் பாகிஸ்தானின் முரண்பாடான இரட்டை நிலை

## அமெரிக்க வெளியுறவு அமைச்சு அறிக்கை

(புதுடில்லி)

ஜம்மு-கஷ்மீரில் பயங்கரவாத வன்முறை பாகிஸ்தானின் ஊடுருவலால் தூண்டப்படுவதாக அமெரிக்கா கூறியிருக்கின்றது.

சென்ற ஆண்டின் பல மாதங்கள் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடையே பெரும் மோதல் ஏற்படக் கூடிய நிலைமை நீடித்தது என்றும் நேற்று முன்தினம் வெளியான அமெரிக்க வெளியுறவு அமைச்சக ஆண்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஜம்மு-கஷ்மீரில் பயங்கரவாதத்தில் ஈடுபட்ட பல்வேறு அமைப்புக்களின் பட்டியலை வெளியிட்டுள்ள அந்த அறிக்கை பயங்கரவாத அமைப்புகளிற்சில பாகிஸ்தானிலும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள கஷ்மீரிலும் இயங்கவுள்ளதாகவும் தெரிவிக்கின்றது.

சில பயங்கரவாதிகள் மதரசாக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் உலகளாவிய பயங்கரவாத தடுப்புப் போரில் அமெரிக்காவின் கூட்டாளியாக விளங்கும் அதே நேரத்தில் காஷ்மீரில் ஆயிரக் கணக்கில் பயங்கரவாதிகளை கட்டவிழ்த்து விடும் பாகிஸ்தானின் முரண்பட்ட பங்குகள் பற்றியும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கின்றது. (பி-9)

# சிவஞானிகளும் உடலெடுத்து உணவுக்கு வருவதால் பசித்தவருக்குச் சோறிடும் பழக்கம் பயனுள்ளதே!

வெள்ளி நற்சிந்தனை

இந்த உலகில் தோன்றி, வளர்ந்து கழிந்த,வாழுகின்ற நாகரிகங்கள் பலவாகும்.மெசப்படோமிய, சுமேரிய,கிரேக்க,ரோமானிய, சிந்துவெளி நாகரிகங்கள் இவற்றுள் சிலவாகும். இவற்றுடன் வைத்து எண்ணத்தக்கவை வேதகால, தமிழக நாகரிகங்களுமாகும்.இன்று வாழும் நாகரிகங்கள் இவற்றிலிருந்து தோன்றிப் பெரிதும் மாறுபட்டுள்ளனவேயாகும்.

ஆனால் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக வளர்ந்துள்ள தமிழர் நாகரிகம் அதிக வேறுபாடு இல்லாமல் வளர்ந்துள்ளமை அறியத்தககதாகும். இந்த தமிழர் பண்பாட்டில் முக்கிய இடத்தைப் பெறுவது விருந்தோம்பலும்,ஏழைகளுக்குச்சோறு போடுவதுமாகும்.இதனை வேறுஎந்த நாட்டவரும் இவ்வளவு வலியுறுத்தவில்லை என்பதையும் அறிதல் வேண்டும்.

### அடியார்க்கு அமுதுஇடல்

சங்கப பாடல்களுள் 'பசிப்பிணி மருத்துவன்' என்று ஒருவன் பேசப்படுகிறான்.ஆற்றுப்படைப் பாடல்களுள் வறியவர்கள் செல்லும் ஊர்கள் தோறும் எவ்வகையான உணவு கிடைக்கும் என்பதும் விரிவாகப் பேசப்படுகிறது. அடுத்து மணிமேகலையின் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!' என்று பேசப்படுகிறது. தேவாரம் பாடிய பிள்ளையாரும்,அப்பரும் பஞ்சம் ஏற்பட்ட ஊரில் மடம் வைத்துச் சோறிட்டதாகப் பெரிய புராணம் பேசுகிறது. 'வருந்தி வந்தவர்க்கு ஈதல்' என்றும், தஞ்சம் என்று அடைந்தவர்களைச் சடையப்ப வள்ளல் தாங்கினான் என்றும கம்ப நாடான் பேசுகிறான். அடியவர்கட்க்கு அமுது இட்ட அடியார்கள் பலர் பெரிய புராணத்தில் உள்ளனர்.

'பசித்தவருக்கு சோறிடும் செயலை ஏன் நம்மவர்கள் இத் துணைத் தூரம் பெரிது படுத்தினர்?'என்று ஆராய்ந்தால் ஓர் உண்மை வெளிப்படும். இந்தத் தமிழர் ,பிறப்'பும்,இறப்பும் சங்கிலித் தொடர் போல் தொடர்ந்து வருவதை நம்பினார்கள். கூர்தல் பரிணாம முறையில் (Evolution) பிறப்பெடுக்கும் உயிர்கள் அவை செய்துள்ள நல்வினை,தீவினைகளுக்கு ஏறபப் பிறப்பெடுக்கின்றன.இது சாதாரண உயிர்களின் பிறப்பு,இறப்புமுறை. முடிவில் இவை பிறவாப் பெரு நிலையாகிய வீடுபேறு பெறுகின்றன. இனி இவ் உலகில் பிறக்க வேண்டிய அவசியமில்லாத ஆன்மாக்



களும் உண்டு. மிகவும் உயர்ந்த நிலையைச் சேர்ந்த இவர்களை 'நித்திய சித்தர்கள்' என்று குறிப்பிடுவர்.நம்மைப்போல் பிறந்து ,இறந்து வரும் நிலை இவர்களிற்கு இல்லை என்பது உண்மை தான். என்றாலும்,தேவைஏற்படும்பொழுது இந்த மகான்கள் ஏதாவது ஓர் உடலில் புகுந்து இவ்வுலகிடை வந்து ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

### பரகாயப் பிரவேசம்

கூடுவிட்டுச் கூடுபாய்தல் அல்லது பரகாயப் பிரவேசம் எனப்படும் இந்த முறையிலும் ஜீவன் முத்தர்கள் வரலாம்.இவ்வாறு இவர்கள் ஓர் உடம்பை எடுக்கும்பொழுது பிறர் தம்மையும்,தம் ஆற்றலையும் அறிந்து கொள்ளக்கூடாத நிலையில் ஏதாவது ஒரு உடம்பைத் தேர்ந்து எடுத்துக் கொள்வர். உறுப்புக் குறைந்தவர்,பெரு நோயாளர் என்று பிறரால் ஒதுக்கப்படும் உடலையே கூட இவர்கள் எடுத்துக் கொள்கின்றனர்.எவ்வளவு பெரிய ஆன்மாக்களாக இருப்பினும் மானிட உடம்பை எடுத்து விட்டால் குறைந்த அளவிலாவது உணவு, தண்ணீர் என்பவை தேவைப்படும். அந்தத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவே இந்த மகாத்மாக்கள் பிக்ஷை எடுக்கின்றனர்.

யாரேனும் ஒருவர் இத்தகைய ஒரு சிவஞானிக்கு ஒரு வேளை உணவு தந்து விட்டால் மாபெரும் பயனை எய்துவர்.ஆனால் இவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியாது. 'இதற்கு வழி என்ன வென்றால் எல்லாப் பிச்சைக்காரர்களுக்கும் உணவு தந்தால் நம்முடைய நற்காலத்துக்கேற்ப அவருள் யாரேனும் ஒருவர் அல்லது இருவர் இந்தவகையைச் சேர்ந்த உயரிய மகான்களாக இருத்தல் கூடும். நூற்றுக்கணக்கான துறவிகளுக்கு உணவு, உடைவழங்கும் பழக்கம் வட நாட்டில வெகுவாகப் பல இடங்களில் உண்டு. அதற்குக் காரணம் அவர்களுள் யாரேனும் ஒரு 'ஹம்சம்' இருக்கக் கூடும் என்பது தான்.

### உணவிடும்பணி

புதுச்சேரியை அடுத்துள்ள இராமநாதபுரம் என்ற ஊரில் கடந்த நூற்றாண்டுக்கு முன்னர் சிவராம கிருஷ்ணன் என்ற அன்பர் வாழ்ந்து வந்தார்.அன்றாடம் பெரிய அண்டாவில் சாம்பார்சாதம்,தயிர்சாதம் தயாரித்து வெளியே கொண்டு வந்து வைத்துக கொள்வார். இரவலர்கள் வரிசையாக வந்து ஓர் இலையில் ஒரு கிண்ணம் சாம்பார் சாதமும்,ஒரு கிண்ணம் தயிர்சாதமும் பெற்றுக் கொண்டு செல்வது வழக்கம். இந்த உணவிடும் பணியை வேலைக்காரர்களைக்கொண்டு செய்யாமல் சிவராமகிருஷ்ணனும் அவர் மனைவியுமே செய்து வந்தனர்.

இந்த நிலையில் ஒரு நாள் சிவராமகிருஷ்ணன் வீட்டுத் திண்ணையில் துறவி ஒருவர் வந்து அமர்ந்திருந்தார். பிக்ஷை ஏற்கவராமல் அவர்,சிவராமகிருஷ்ணனை ஓரக் கணணால் பார்த்துக்கொண்டு ,சிரித்துக்கொண்டே இருந்தார். இதைப் பார்த்துவிட்ட சிவராமகிருஷ்ணன், 'ஓய் சாமியாரே! பிக்ஷை வாங்கவும் வராமல் என்ன நீராகச் சிரித்துக் கொண்டு இருக்கிறீர்?'என்று சறறுக் காட்டமாகவே கேட்டுவிட்டார்.

துறவி கொஞ்சமும் பதற்றப் படாமல் 'உம்முடைய மனத்தில் ஓடும் எண்ணத்தைப் பார்த்துச் சிரித்தேன்' என்றார். வீட்டுக்காரர் இன்னும் சற்றுக்காரமாக 'என் மனத்திற்குள் புகுந்து பார்த்தீரா? என்ன நினைத்தேன் சொல்லும் பார்க்கலாம்?' என்றார்.'இத்தனை நாட்கள் தவறாமல் தினந்தோறும் நானும் என் மனைவியும் இதனைச் செய்கிறோமே யாராவது ஒரு பெரியவர்,ஒரு சித்தர் ,ஒரு சிவஞானி வந்து நம் பிக்ஷையை ஏற்கக்கூடாதா? தினமும் இந்த அங்கவீனர்கள், தொழுநோயாளர்கள் தானா வர வேண்டும்? என்று நர் நினைத்ததைப் பார்த்துச் சிரித்தேன்' என்று அந்தச் சன்னியாசி கூறியதும் சிவராம கிருஷ்ணன் நடுங்கிவிட்டார்.

**அ.ச. ஞானசம்பந்தன்**

காரணம் அவர் நினைத்ததைதுறவி அப்படியே படம்பிடித்துவிட்டார்.

### கண் குருடு ஆயிற்று

மேலும் துறவி தொடர்ந்து,'சிவராம கிருஷ்ணா! கவலையை விடும். மிகப்பெரிய மகான்கள் சிலர் இந்தக் கூடடத்தில் வந்து உமது பிக்ஷையை ஏற்கிறார்கள்' என்று கூறினார். வீட்டுக்காரர் அதை நம்பவில்லை. அப்படியானால் அவர்களைத்தம் கண்களால் பார்க்கவேண்டும் என்று மன்றாடினார். 'அவர்களைப் பார்ப்பது இயலாத காரியம்.மீறிப்பார்க்க முயன்றால் கண் கெட்டுவிடும்' என்று துறவி பலமுறை தடுத்தார். சிவராமகிருஷ்ணன்'மகான்களைத் தரிசித்தபிறகு என் கண் போனால் அதனால் கவலை இல்லை' என்று மன்றாடியதால்,சுவாமிஜி மறுநாள் காட்டுவதாக உறுதியளித்தார்.

மறுநாள் வழக்கம்போல் பிச்சைககாரர் கூட்டம்.சிவராமகிருஷ்ணனும் அவர்மனைவியும் இலைகளில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். திடீரென்று துறவி, 'சிவராம கிருஷ்ணா! இரவலர்வரிசையில் நாலுபேருக்குப்பின் நிற்பவர்களைப் பாரும்' என்றார். உணவு படைப்பவர் அப்படியே பார்த்தார்.ஜகத் ஜோதி வடிவுடன் இருவர் உணவு வாங்கும் இலையுடன் நிற்பதைக் கண்டார்.உடனே அவரது கண்கள் குருடாகிவிட்டன.

ஓரிரு ஆண்டுகள் கழித்து அந்தத் துறவி மீண்டும் அங்கே வந்து சிவராமகிருஷ்ணனுக்குப் பார்வை கிடைக்குமாறு செய்தார் என்று வரலாற்றால் அறிகிறோம். தமிழர் யார் ,எவர் என்று பாராமல் உணவிடுவதன் இரகசியம் இதுவே என்பதை அறிதல் நலம். □

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழகம்,யாழ்.மாவட்ட தாச்சிச்சங்கத்தின் அனுசரணையுடன அண்ணாவிளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திவரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டியின் 3வது சுற்றில் இன்று பி.ப.4.45 மணிக்குகொக்குவில் வராகி விளையாட்டுக்கழகமும் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக கழகமும் பங்குபற்றவுள்ளன.(உ-10)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினரால் நடத்தப்படும் வாராந்த நிகழ்வுகளில் இன்று மு.ப. 10.30 மணிக்கு எமது சமய இலக்கியங்கள் என்ற விடயம் பற்றி ம.சுதர்சனும்,சிவ மூர்த்தங்கள் என்ற விடயம் பற்றி பொ. நிஷாந்தனும் சமயமும் வாழ்வும் என்ற விடயம் பற்றி க. விகர்னனும் சொற்பொழிவாற்றவுள்ளனர்.(உ-8)

## திடீர் பரிசோதனை

(சுதுமலை)

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுழிபுரம் வழக்கம்பரை போன்ற இடங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நடத்திய திடீர்ப்பரிசோதனையின் போது உணவுக்கடைகளில், விதிகளுக்கு முரணாகவைக் கப்பட்டிருந்த உணவுப் பண்டங்கள் கைப்பற்றியழிக்கப்பட்டன.

அத்துடன் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்களும் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். (உ-252)

## ஆன்மீக நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீசோமாஸ் கந்தக் கல்லூரி இந்து மன்றத்தினரால் உலக இந்து மாநாடு தொடர்பாக நடத்தப்படும்ஆன்மீக நிகழ்வுகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

இதன் கீழ் கல்லூரியில் உள்ள சோமாஸ்கந்த ஆலயத்தில் காலை, மாலை விசேட பூசைகள், கூட்டு வழிபாடுகள், ஆன்மீக உரைகள் என்பன இடம்பெறவுள்ளன. (உ)

# பொலிஸ் சேவையின் நிலை குறித்து உ வாரத்தில் அறிக்கை சமர்ப்பிக்குக!

## ஜனாதிபதி பிரதமருக்கு கடிதம்

(கொழும்பு)

பொலிஸாருக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் அனாவசிய அரசியல் தலையீடுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் அதனைத்தடுக்குமாறு மக்கள் விடுக்கும் கோரிக்கை குறித்து ஆராய வேண்டிய நிலை ஏற்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவித்திருபபதாவது, உள்துறை அமைச்சின கீழ் இயங்கும் இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தில் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன.

முக்கியமாக கடந்த சில காலங்களாக பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தபோது சில அரசியல் வாதிகள் அவர்களை அச்சுறுத்தி கடமையைச் செய்யவிடாது தடுத்து வருகின்றனர்.

எனவே, பொலிஸ்சேவையை வழமை நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் குறித்து இன்னும்இரண்டு வாரங்களுக்குள் பிரதமர் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என ஜனாதிபதி எழுதியுள்ள கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (உ-10)

# அரசியல் நிலைவரம் குறித்து எதிர்க் கட்சிகள் விவாதம்

## மகிந்த ராஜபக்ஷ தகவல்

(யாழ்ப்பாணம்)

பேச்சுவார்த்தையில் இருந்து விடுதலைப்புலிகள் இடைவிலகியமை,கடற்புலிகளுக்கான தனியான கடல்வலயம் உள்ளிட்ட தற்போதைய பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சிகள் விவாதிக்கவுள்ளன.

எதிர்வரும்6ஆம்திகதி செவ்வாயக கிழமை பாராளுமன்றம் கூடிய பின்னர் இவ்விவாதம் இடம்பெறுவதற்கு பிரதமர் ரணில்விக்கிரமசிங்க இணங்கியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் பத்திரிகையாளர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,மேற்படி விவாதம் நடத்துவது குறித்து எதிர்வரும் 5ஆம் திகதி எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூடி ஆராயவுள்ளதாகவும்,



சமாதான முன்னெடுப்புகள் அதன் முன்னேற்றங்கள் இது விடயங்களில் எதிர்க்கட்சிகளின்அபிப்பிராயங்கள் என்பன இவ் விவாதத்தில் முன்வைக்கப்படவிருப்பதாக மகிந்த மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# பேச்சில் இருந்து புலிகள் விலகியமை கோரிக்கைகளை நிறைவேற்றும் உபாயம்

## ஜே.வி.பி. பொதுச் செயலாளர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளும் தந்திரோபாயமாகவே சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாக விலகியுள்ளார்கள் என மககள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டி.வி. என். சில்வா கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,விடுதலைப்புலிகள் இந்தப் போலியான சமாதானப் பேச்சிலிருந்து விலகிக்கொள்வதாக எடுத்த தீர்மானம் ,அது குறித்து அனுப்பியுள்ள கடிதம் மற்றும் அரசியல் கருத்துப்பரிமாற்றங்கள் ஆகியவற்றை அவதானிக்கும் போது அவர்கள் வேண்டும் என்றே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிகிறது.

விடுதலைப்புலிகள் பேச்சிலிருந்து விலகுவார்கள் என நாங்கள் நம்பவில்லை. ஏனென்றால் பேச்சிலிருந்து இவர்கள் விலகிக் கொள்ளவேண்டிய எந்த நிலைமையும் ஏற்படவில்லை.அந்த அளவுக்கு அரசு அவர்களுக்கு எந்தக்குறையும் விட்டதில்லை .

மேலும் யுத்தத்தின்போது இவர்கள் பெற்ற நன்மையை விட சமாதானபேச்சின் மூலம் கூடுதலான அனுகூலங்களைப் பெற்று வருகின்றனர் என்றார். (உ-10)

# இந்தியாவில் இருந்து மருந்துகள் இறக்குமதி

(கொழும்பு)

புதிதாக 25வகையான மருந்து வகைகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் முதற்கட்டமாக 10 வகையான மருந்துகளை இறக்குமதி செய்து,குறைந்த விலையில் சந்தைப்படுத்தவுள்ளதாகவும், இம் மருந்துகள் நீரிழிவு மற்றும் இருதய நோய் ஆகியவற்றிற்கே உரியது என்றும் அமைச்சர் ரவிகருணாநாயக்கா மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

# யாழ் .மாவட்டத்தவர் நால்வர் தேசிய போட்டிக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட மரதனோட்டப் போட்டியில் வெற்றியீட்டிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் நால்வர் தேசிய மட்டமரதன் ஓட்டப்போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

மாகாண மட்ட ஆண்கள் பிரிவு மரதனோட்டப்போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெற்ற சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த எஸ்.காந்தரூபன், 6ஆம் இடத்தைப்பெற்ற வேலணைப்பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த எஸ்.யதீஸ் ஆகியோரும்,

மாகாண மட்ட பெண்கள் பிரிவு மரதனோட்டப்போட்டியில் நான்காம் இடத்தைப்பெற்ற நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த எஸ். பிறேமலட்சுமி ,தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த என்.பிறேமினி ஆகியோரே தேசிய மட்டப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் (உ)

# கோட்டைப் பகுதியில் முகாம் அமைப்பதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்

## பல்கலை மாணவர் ஒன்றியம் பிரதமருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம்,யாழ். கோட்டைப் பகுதியில் படைமுகாம் அமைக்கப்படுவதனை முற்றுமுழுதாக எதிர்க்கின்றோம். மக்களின் மனித உரிமைகளை மீறுகின்ற மக்களது வருப்பத்திற்கு மாறான இச் செயல், மக்கள்எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட வழிவகுக்கக் கூடும்.

இது சமாதானமுயற்சிகளைப் பாதிக்கும் என்பதால்,முகாம் அமைக்கும்விடயத்தில் பிரதமராகிய தாங்கள் உடனடியாகத் தலையிட்டு அதனைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 30ஆம்திகதியிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி தங்களுக்கும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மக்கள் மீள் குடியமர்வுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இயல்பு நிலை தோற்றுவிக்கப்படவேண்டும் என்பதுடன் புதிய இராணுவ முகாம்களோ படை நிலைகளோ அமைக்கப் படக்கூடாது.

ஆனால் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி 16 மாதங்கள் கடந்த நிலையிலும் பல இலட்சக்கணக்கான மக்கள் அகதிமுகாம்களிலும் புனர்வாழ்வு முகாம்களிலும் எந்த வித அடிப்படைவசதிகளுமின்றி சொல்லொணாத்துன்பங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

நிலைமை இவ்வாறு இருக்கையில், அவர்களது வாழ்விடங்களில் இராணுவம் முகாமிட்டுள்ளது. இராணுவத்தினரை மக்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றி மக்கள் மீள தமது சொந்த வீடுகளில் குடியமர ஆவன செய்யும்படி பல தடவைகள் கோரியும் இன்னமும் அது நடைபெறவில்லை.

இந்நிலையில்,யாழ்.நகரப்பகுதியில் மாநகரசபைக்குச் சொந்தமான காணியில் புதிய முகாம் அமைப்பது தொடர்பான சர்ச்சை படையினரால் கிளப்பப்பட்டு மக்களின் எதிர்ப்பினாலும் தங்களது தலையீட்டினாலும் அது நிறுத்தப்பட்டது.

தற்போது தாங்கள் படைமுகாம் அமைப்பதற்கு திட்டமிட்டுள்ள பகுதியானது மாநகரசபைக்குச் சொந்தமான காணியிலிருந்து ஏறத்தாழ 250 மீற்றர் மட்டும் வித்தியாசமுள்ள கோட்டைப்பகுதி என செய்திகள் வெளியாகியுள்ளன. இச் செய்தி மீண்டும் மக்கள் மத்தியில் அச்சத்தினையும் குழப்பத்தினையும் ஆத்திரத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.

தாங்கள் படைமுகாம் அமைப்பதற்கு திட்டமிட்டுள்ள கோட்டைப் பகுதியானது,மக்கள் நடமாட்டம் மிக அதிகமான நகரப்பகுதியாகும். இதில் படைத்தளம் அமைவதனால் மக்கள் பல நெருக்கடிகளையும் இராணுவக்கெடுபிடிகளையும் சந்திக்க வேண்டி வரும்.குறிப்பாக பெண்கள் பெரும் பாதிப்புக்குள்ளாக வேண்டியிருக்கும்.

இப்பகுதியைச் சுற்றிய பகுதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாவனையிலுள்ள வீரசிங்கம் மண்டபம், பொதுநூலகம், விளையாட்டு மைதானம், தொலைத் தொடர்புப்பரிவர்த்தனை நிலையம்,பொதுச் சநதை, யாழ்மாவட்ட விவசாய நுகர்வுக் கூட்டுறவுச் சங்கச்சமாசம், பிரபலமான இந்து ஆலயமான முனியப்பர் ஆலயம்,யாழ்.மத்திய கல்லூரி சுற்றுலாவிடுதி என்பன அமைந்துளளன.

அத்துடன், புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் உடனடியாக புனரமைக்கப்படவேண்டிய பிரதம தபால்கந்தோர், சுப்பிரமணியம் பூங்கா,நீதிமன்ற வளாகம், மார்புச் சிகச்சை நிலையம்,யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடத்தொகுதி என்பனஅமையவுள்ளன.

அத்துடன்,அராலி, வட்டுக்கோட்டை பிரதான வீதியும் தீவகத்தினை குடாநாட்டுடன் இணைக்கும் பிரதானவீதியும் முழுமையாக மகக்ள் பாவனையிலிருந்து துண்டிக்கப்படக்கூடிய அபாயநிலையுள்ளதுடன்,புனரமைப்பு புனர்வாழ்வு திட்டத்தின்கீழ் நிறுவப்படவுள்ள அனைத்து கட்டுமானப்பணிகளும் தடைப்படக்கூடிய ஆபத்தான சூழ்நிலையுள்ளது.

அதுமட்டுமன்றி,பண்ணைக் கடலில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் பல நூற்றுக்கணக்கான மீனவர்களின் தொழில் முயற்சிகள் உடனடியாக பாதிப்புக்குள்ளாகக் கூடிய அபாய நிலையுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# 2வது உலக இந்து மாநாடு இன்று கொழும்பில் கோலாகல ஆரம்பம்

## நிகழ்வில் ஜனாதிபதி,பிரதமர் பிரசன்னம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அமைச்சின் ஏற்பாட்டில் இடம் பெறும் இரண்டாவது உலக இந்து மநாடு இன்று காலை 7 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டின் ஆரம்ப வைபவத்தை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

எதிர்வரும் 5ஆம் திகதி வரையான நான்கு தினங்கள் கொழும்பில் இடம்பெறவுள்ள இம் மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வு எதிர்வரும் 6ஆம் திகதி நுவரெலியாவில் இடம்பெறவுள்ளது.

இக் காலப் பகுதியில் பிராந்தியாதியான இந்து மாநாடுகள் யாழ்ப்பாணம், வவுனியா,மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, கண்டி,பதுளை,மாத்தளை ஆகிய இடங்களிலும ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

தவிரவும் ஆலயங்கள்,இந்து சமய நிறுவனங்கள், பாடசாலைகள், வீடுகள யாவும் இநது கலாசார முறைப்படி மாவிலை, தோரணம்,வாழை என்பவற்றினால் அலங்கரிக்கப் பட்டு நந்திக் கொடியேற்றி விசேட பூஜைகள்,ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் இம்மாநாட்டிற்கு தமிழகத்திலிருந்து திருவாவடுதுறை,தர்மபுரம்,திருப்பனந்தாள் ஆதீனங்கள் மற்றும் அறிஞர்கள், பேச்சாளர்கள் அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# பிரேமதாஸ காட்டிய வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## 10வது சிரார்த்த தினத்தில் பிரதமர் உரை

(கொழும்பு)

எவரையும் புறம்தள்ளாது நடைமுறையில் அனைவரையும் சேர்த்துக் கொள்ளும் நோக்குள்ள முன்னாள் ஜனாதிபதி அமரர் பிரேமதாஸவின் வழி நடத்தலின்படியே இன்று நாமும் அரசியலில் ஈடுபட்டுள்ளோம். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கொழும்பு புனித டஸ்ஸியன் மாவத்தையில் உள்ள பிரேமதாஸ நினைவு மண்டபத்தில் நடைபெற்ற அன்னாரின் 10வது சிரார்த்ததின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் ,முன்னாள் ஜனாதிபதி அமரர் ரணசிங்க பிரேமதாஸ ஜனநாயகத்தை பொதுமக்கள் உடமையாக்கிய தலைவர் என்று வர்ணிக்கப்பட்டவர்.

இவர்,கிராமியமட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை அனைத்து மக்களையும் இணைத்துச் செயற்படுத்த முனைந்தவர்.

ஜனநாயகத்தை நிராகரிக்கும் குழுக்களையும் ஜனநாயக நீரோடடத்தில் இணைத்து,தீர்மானங்களை மேற்கொள்ளும் நடைமுறையில் நம்பிக்கை கொண்டவர் பிரேமதாஸ.

இதன்பிரகாரமே,இன்று நாமும் விடுதலைப்புலிகளை ஜனநாயக நீரோடடத்தில் இணைத்து சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்கிறோம்.

குடியிருப்புவசதிகள் இல்லாதவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பது,பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள் ,போஷாக்கு உணவு வழங்கல் மற்றும் கிராமோதய திட்டமூலம் வறியவர்களை செல்வந்தர்களாக மாற்றுவது போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தி அவர் ஆற்றிய பணிகளை நாமும் தொடர்வோம்.

அவரது அளப்பரிய பணிகளையும்அவர் மக்கள்மீது கொண்ட அககறையையும் மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள் என்றார். (உ)

# விடுதலையான பலர் சிறையில் வாடுகின்றனர்

## நீதி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

நீதிமன்றங்களினால் விடுதலை செயயப்பட்ட போதும் சிலர் தொடர்ந்தும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தமக்கு பெருமளவு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக நதிஅமைச்சர் டபிள்யூ.ஏ.எம்.லொக்கு பண்டார தெரிவித்தார்.

நீதிஅமைச்சின் செயற்குழுக்கூட்டத்திலேயே இவர் இதனைத் தெரிவித்தார்.

நதிமன்றங்களால் விடுதலைசெய்யபட்டபோதும் அது தொடர்பான உத்தரவுகள் சிறைச்சாலைகளுக்கு குறிப்பிட்ட நேரத்திலே கிடைக்காமையும் இதற்கான காரணமாக இருக்கலாம் என்றும்,

எனவே இதுதொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அமைச்சர்லொக்குபண்டார கேட்டுள்ளார். (உ-10)






புதிய ஜனநாயகக்கட்சியின் மேதினக்கூட்டம் நேற்று யாழ். ப.நோ.கூ. சங்கமண்டபத்தில் நடைபெற்றபோது தாயகம் ஆசிரியர் தணிகாசலம் உரையாற்றுவதையும், கட்சியின் பொதுச்செயலாளர் சி.க.செந்திவேல் உட்படமூத்த உறுப்பினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

### பிரேமதாஸவின் 10வது நினைவுதினம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி அமரர் ரணசிங்க பிரேமதாஸவின்10வது நினைவு தினம் நேற்று கொழும்பில் அனுட்டிக்கப்பட்டது.

1989ஆம் ஆண்டு இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி ஏற்ற இவர், 1993 ஆம்ஆண்டு நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் ஏற்பட்ட அசம்பாவிதத்தில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

### மிதிவெடியில் சிக்கி படுகாயம்

(புன்னாலைக்கட்டுவன்)

உரும்பிராய் பர்வதபத்தினி ஆலய கட்டடவேலையில் ஈடுபட்டிருந்த சுழிபுரம்மேற்கு குடத்தனையைச் சேர்ந்த இ.சசிகுமார்(வயது-21) என்பவர் மிதிவெடியில் சிக்கி காலில கடும்காயங்களுடன் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த29ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இயற்கைக்கடன் கழிப்பதற்காக மேற்படி கோயில் அருகாமையில் உள்ள பற்றைக்குள் சென்ற போதே இவர் மிதிவெடியில் சிக்குண்டு காலில் பெரும்காயங்களுக்கு உள்ளாகி இருப்பதாகக்கூறப்படுகிறது.(உ-70)

### இலங்கை நடிகைக்கு சிங்கப்பூரில் விருது

(கொழும்பு)

உலகின் முன்னணித் திரைப்பட விழாக்களில் ஒன்றான சிங்கப்பூர் திரைப்பட விழாவில் இலங்கை நடிகைக்கு பெண் ஒருவருக்கு சிறந்த நடிகைக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

'பனிக்காட்யதியாமன ' என்ற சிங்கள திரைப்படத்தில் பிரதான பாத்திரமாக நடித்த அனோமா தெனாகரி என்ற நடிகையே இந்த விருதைப் பெற்றுள்ளார். (உ-10)

### நாய்களுக்கு தடுப்பூசி

(அளவெட்டி)

சுன்னாகம் கால்நடை வைத்திய அதிகாரிபிரிவுக்கு உட்பட்ட நாய்களுக்கான தடுப்பூசி இன்று காலை 8.30 மணிக்கு சுன்னாகம் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து போடப்படவுள்ளது. (உ-83)

# கூறானது மனம்

வெள்ளி முற்றம்

எல்லாநேரத்திலும் புத்திசாலி யாய் இருப்பதும், புத்திசாலியாய் நடநது கொள்வதும் மிகவும் அயர்ச்சி தரும் விடயங்கள். அதனால இடையிடை எனது அகக் குழந் தையை நான் மேலே தூக்கிவிட்டு விடுவதுண்டு. அப்படியொரு மாலை வேலையில் தான் அந்த மறையன் பூனை எங்கள் வீட்டுக் கோடியால் பயந்து பயந்து போன போது நான், "மியா, மியா" என்று அதைக் கூப்பிட்டேன். வாலப்பக்கத் திலும் பின்னங்காலிலும் அதிகம் தடித்த சாம்பல் நிறத்துடனும், முன்னங்காலிலும் வயிற்றுப்புறத் திலும் மெல்லிய வெள்ளை கலந்த சாம்பலுடனும் போனஅது எனது குரலைக் கேட்டு, நின்று மருண்டு பார்த்துவிட்டு தானும் ஒரு முறை "மியா" என்று விட்டுப் போய்விட்டது.

அந்தச் சம்பவம் எனக்கு மறந்து போய்விட்டதாய் நாம் நினைத்திருந்த ஒரு முன்னிரவில், சாப்பாடு எடுப்பதற்காக நான் குசினிககுப போனபோது அது வடக்குப் புற ஹொரிடோரில் இருந்த கட்டிலில் இருந்து பாய்ந்து, நெற்றடித்த வெளப்புறச் சுவரில் இருந்த தூண் இடைவெளி ஊடாக வெளியே கோடிக்கு ஓடியதை நான் எதேச்சையாகக் கண்டேன்.

வெளியே இருள், நரைத்த தலைமாதிரி உலகை கவிந்திருந் தது.

நான் இரவுணவை எடுத்துக் கொண்டு ஹோலுக்கு வந்தபோது மீண்டும் அது ஹோலுக்குள்ளே குறுக்கே ஓடியது.

"இந்தப் பூனை ஒண்டு நெடுக வும் வீட்டுக்குள்ளை திரியுது. விடிய வெளிக்கிடுறநேரங்களிலை முழிசுவளத்திற்கு குறுக்காலை போப்போது...." என்று கணவர் சொன்னார்.

நான் அதற்குப் பதில் சொல்ல வாய் எடுக்க முன்னரே, புதியதோர் அழுகைச் சத்தம் வடக்குப்புற கட்டில் பக்கம் கேட்டது.

"இதென்ன புதுச் சத்தம்? பூனைதான் குட்டிபோட்டிட்டுதோ?"


என் உடலில் வியர்வை புள்ளி புள்ளியாய் சேர்ந்தது. எழுந்து கடடில்ப்பக்கம் சென்றேன். ஹோலுக்கு வெளிப்புறமாய் இருந்த அந்தக் கடடிலில் பல கடதாசிப் பெட்டிகள்- வெறும் பெட்டிகள்- அடுக்கப்பட்டிருந் தன. அந்தப்பெட்டிகளில் ஒன்றுக் குள் இருந்து தான் சத்தம் வரு கிறது.

"இந்தவெறும்பெட்டியளை இதிலை அடுக்கவேண்டாம் என்று சொன்னனான்"

"சொல்றது சுகம். பிறகு அடுத்த முறை வீடு மாறேக்கை புத்தகங்கள் கட்டிறதுக்குப் பெட்டிக்கு எங்கை போறது"

தொண்ணூறில் எமது சொந்த வீட்டில் இருந்து இடம்பெயர்ந்த பின் இதுவரை ஒன்பது வீடு மாறியாகி விட்டது. இன்னும் எத்தனை வீடு பார்க்க வேண்டிய தலைவிதி இருக கிறதோ? அதுவும் நியாயம் தான். பெட்டிகள் தேவை.

மேலிருந்த ஒரு பெட்டியின மூடியை மெதுவாய் திறந்து பார்த் தேன். ஒன்றும் இல்லை. சத்தம் அடுத்த பெட்டியில் இருந்து திடீரென்று கேட்டபோது மனதில் தோன்றிய உணர்வு பயமா? பதற்றமா? மகிழவா? அருவருப்பா?



ஹெப்பியா? பரிதாபமா?

மற்றப பெட்டியைத் திறக்காமலே இடைவெளியொன்றில் கண்ணை ஒட்டி உள்ளே பார்த்தேன். மார்பு பளபளவென்று மின்ன.... இளஇள வென்று இருக்கும் புதிய குட்டிகள் நல்..ல்...ல வெள்ளை

"ஓமப்பா குட்டி தான் போட்டிட் டுது... ரண்டு குட்டி..."

"சீ... சீ... எடுத்து எறியுங்கோ வெளியாலே... அசிங்கம்..."

நான் எதுவும் செய்யாதிருப்பதை பார்த்து விட்டு கணவரும் வந்து எட்டிப்பார்த்தார். பெட்டியோடு தூக்கி எறிவார் என்று நினைத் தேன அவரும் சிறிது நேரம் பார்த்து விட்டு பேசாமல் போய்விட்டார்.

உயிர்களை நேசிக்கும் மானிடத் தை தேடுவதில் ஒரு பயணம் மௌனமாய் நடக்கிறதா?

அடுத்த நாள் காலையில் எழுந்தவுடனேயே குறுக்கே போகும் தாய்ப்பூனைதான் "முழுசு வளம்!" நான் "மியா, மியா" என்று கூப்பிட்டதை ஒரு நட்பார்ந்த அழைப் பாக எடுத்துக்கொண்டு தான். எங்கள் வீட்டைப் "பிரசவ வார்ட்" ஆக்கியிருக்கிறதா? யார் வீட்டுப் பூனை இது?

குட்டிகளுக்குப் பாலூட்டுவதற காக தாய்ப்பூனை பெட்டிக்குள் பாய்ந்து ஏறியவுடன் குட்டிகள் "காச்சு மாச்சென்று" கத்தும். சிறிது நேரத்தில் எல்லாம் அமைதியாகி விடும் "இப்போது அவை தாய் மடியல் மகிழ்வுடன் பால் அருந்தும்!" எனக்குள் அந்த நினைவு மகிழ் வாய்!

என்மகளுக்கு நான் பாலூட்டிக கொண்டிருந்த ஒரு அந்திப்பொழு தல் தான் எங்கள் வீட்டின் பின்புறத் தல் ஷெல்வீழ்ந்து நாம் ஓடவேண்டி வந்தது என்பதற்காய்... பூனைக் குடடி அமைதியாயப் பால் குடிக்கக கூடாதா என்ன?

பக்கத்துவீட்டில் நாம் விலை கொடுத்து வாங்கும் பசுப்பாலில் கோப்பி போட்டு குசினியில் இருந்து எடுத்துவரும் போது, சாம்பல் நிறப் பூனை என்காலைச் சுற்றி வந்து அழுதது.

பாவம்! பாலூட்டும் தாய், புண்ணான வயிறு என்று யாரும் அதற்குச் சரக்குக்கறி வைத்துச் சோறு கொடுக்கப் போகிறார்களா எனன? எனக்கும் பூனைக்கும் எந்தவித குடுக்கல் வாங்கலுமில் லைத்தான். சொந்தமும் இல்லை. பந்தமும் இல்லை. ஒரே இனமா? ஒரே சமயமா? தாய்மொழியாவது ஒன்றா? எதுவும் இல்லை. என் றாலும் ஒன்பதாவது வீட்டில் அகதிவாழ்வு வாழும் என்னிடம் அது உணவு கேட்கிறது!. நான் ஆரம்பத்தில் ஒரு நாள் "மியா" சொல்லத்தானும் "மியா" சொன்ன அந்தத் தொடர்பு மட்டும் தான். என்ன மாதிரி அது என்னிடம் உரிமை எடுத்துக் கொள்கிறது? எந்த விதமான கேட்டுக்கேள்வியுமின்றி எங்கள் வீட்டில் பிரசவம் வைத்துக் கொணடது மட்டுமின்றி இப்போது உணவும் கேட்கிறது! உணவு கேடப்பது என்றால், எல்லாரிடமும் போய் கேட்க முடியுமா? ஒத்துணர்வு மனங்களை அது தேடுகிறது. மன சுள் பேச்சு ஓடிற்று.

குசினியில் இருந்த சிரட்டை யொன்றை எடுத்து வந்து சிறிதளவு பால்க் கோப்பி ஊற்றி நிலத்தில் வைத்தேன்.

பூனை பால் குடிக்கும்!

சந்தோஷமாய்க் குடித்தது. பின்னர் எலி பிடிப்பதற்காகப்போலும் பாய்ந்து ஓட்டில் ஏறியது.

நான் மெதுவாக நடந்து சென்று, குட்டிகளுக்கு இடைஞ்சல் தரக் கூடாது என்ற கவனத்துடன்- மீண்டும் பெட்டியை எட்டிப் பார்த்தேன். அந்த வெள்ளைக் குஞ்சுகள் - சோக்கான நித்திரை. பாவம். துயில் கொள்ளட்டும். திடும் திடும் என்று பயங்கரக் கனவுகளோடு வரும் தூக்கமாய் இல்லாதிருக் கட்டும். "என்னப்பா, பூனைக்குட்டி வளக்கிறீங்களா?" "அது இன்னு மொரு ஐந்தாறு நாளைக்குள்ளை தாய்ப்பூனை தூக்கிக் கொண்டு போயிடும். அது வரைக்கும் தானே இருக்கட்டும்"

"தூக்கிக்கொண்டு போனாப் பறகு பெட்டியை தூக்கி குப்பையிலை எறிவம்"

தாய்ப்பூனையா? நானா அதிகளவு நேரம் குட்டிகளை எட்டி எட்டிப்பார்க் கிறோம் என்பது கேள்வியாக இருந்தது.

பாலைப் பெற்றுக் கொண்டதாய்ப் பூனை நாங்கள் சாப்பிடும் வேளை களில் சாப்பாடும் கேட்டது. அது தான் பரவாயில்லை என்றால் மாலைத் தேனீருடன் அருந்தும் "கறுககு மொறுக்கு" பலகாரங்கள் கட்டாயம் தருமாறு வற்புறுத் தியது. இல்லையென்றால் உரிமையுடன் மடியிலேறி பறித்துக் கொண்டது.

"எப்ப இது குட்டியைத் தூக்கிக் கொண்டு போகும்?"

"அது ஏழு வீடு காவும் எண்டு சொல்லிறவை" மிக விரைவில் தாய்ப்பூனை மெத்தென்ற குட்டி களை தூக்கிக்கொண்டு போய் வடும் என்பதே இப்போது ஒரு கவலை யாய் போய்யிற்று. கணம் தோறும் பார்க்கவேண்டும் போல ஒரு நினைவு. அதற்காக நித்திரை கொள்ளாதிருக்க முடியுமா என்ன?

நாலுநாள் "பெத்தவீட்டுப்" பராமரிப்பு சிறப்பாக முடிந்திருந் தது.

அனறிரவும் நான் படுக்கைக்குப் போகுமுன் அவதானித்தேன். தாய்ப்பூனை கட்டிலின் அருகில் குந்தியிருந்து காலை நக்கிக் கொண்டு காவல் இருந்தது.

அன்று இரவு பூராவும் நல்ல மழை. தலை முதல் பாதம் ஈறாகக் கம்பளியால போர்த்துக் கொண்டு நானும் தான் நல்ல நித்திரை. இடம் பெயர்ந்த வாழ்வு அகதி வாழ்வு என்கிற சங்கதிகள் எல்லாம் நததிரைக்குத் தெரியாது. அது எந்த நிலையிலும் என்னை இறுக்க மாய் அணைத்துக் கொள்ளும். கடுமழையில் இடி இடித்தது. மின்னல் சீறியது. கனவில் பாம்பு வந்தது. விழித்துப் பார்த்து விட்டு கனவு தானே என்று மீண்டும் நித்திரை.

கட்டிலில் இருந்த பெட்டிகள் தட்டுப்பட்டு விழுந்தது போன்ற சத்தம் கேட்டபோது அதிகாலை நான்கு மணி இருக்கலாம்.

"என்னப்பா பெட்டியள வ்ழுந்து சத்தம் கேட்குது?"

"தாய்ப்பூனை பாயேக்கை தடடுப்பட்டு போச்சாக்கும்" இன்னொரு கண் நித்திரை செய்து எழும்ப விடிந்து விடும்.

விடிந்ததும் முதலில் எழுந்தது நான் தான். கடந்த சில நாள் வழக்கம்போல, குசினிக்குச் செல்லும் வளியில் கட்டிலுக்கு அருகில் சென்றேன். பெட்டிகள் கீழே விழுந்திருந்தன.

மிக அவசரமாய் வெள்ளைப் பூனை - பெரிய பூனை - ஒன்று பாய்ந்து தூண் இடைவெளி ஊடே வெளி யேறியது.

பெட்டி கிழக்குப் புறம் பார்த்து விழுந்து கிடந்தது. பெட்டியை மெல்லத் திறந்தேன்.

கால் ஒன்று கடித்துக் குதறப் பட்ட நிலையில் இரத்தம் சிந்தக் கிடந்தது வெள்ளைக் குட்டி யொன்று. பெட்டியின் மூடியெல் லாம் இரத்தம்சிந்திக் கிடந்தது.

இடி இடித்தது. மின்னல் சீறியது. என் தலையில் மின்னல் இறங்கியது போல இருந்தது. நான் இரண்டு கூறானேன். கூறானது உடம்பல்ல மனம்! "இஞ்சை வந்து பாருங்கோவன்... வெளளைப்பூனை ஒன்று குட்டியை கடிச்சுப் போட்டு... குட்டி செத்துப் போச்சு...!

"அது கடுவன் பூனையாய் இருக்கும்..."

"மற்றக்குட்டியையும் காணேல் லை அப்பா..."

"அதை தாய்கொண்டு போயிருக் கும்..." வெள்ளைப்பூனையும், சாம்பல் பூனையும் ஒரே இனம். அவை பேசும் மொழியும் ஒன்றுதானே!

அன்று மாலை சாம்பல் பூனை வநதது. என்னைப் பார்த்து "மியா" என்றது. நானும் "மியா,மியா" என்றேன். என்காலுக்கருகில் குந்தியிருந்தது. நானும் உடனிருந் தேன். அதன் முகத்தை உற்றுப்பார்த் தேன். அது என்னை ஒருமுறை பார்த்து விட்டு தலைகுனிந்து கொணடது. அழுகிறதா?

"பள்ளையை விட்டுப் பிரியிறது எவ்வளவு உணர்வுச் சுமைகளைத் தரக்கூடியது என்று எனக்கு விளங் குது."

நான் எனது மொழியில் சாம்பல் பூனைக்கு ஒத்துணர்வு கொடுத்து, அதன் முதுகை மெதுவாகத் தடவிக கொடுத்தேன்.

அது மீண்டும் என் முகத்தை பார்த்து "மியா" "மியா, மியா, மியா", "மியா, மியா" "மியா, மியா, மியா, மியா, மியா" ....."மீ...... யா...." என்றது.

இழப்புத் துயர் தொடர்பான சீர்மியம் செய்வதாயின் பூனையை எந்தெந்தப் படி நிலைகளூடாக அழைத்துச் செல்லவேண்டும் என்ற சிந்தனை என் மனதில் பூத்தது.

**கோகிலா மகேந்திரன்**

# மேலாதிக்க சக்திகளின் நோக்கங்களை எதிர்த்து நாம் போராட வேண்டும்

## புதியஜனநாயகக் கட்சி பொதுச்செயலர் மேதின உரை

(தென்மராட்சி)

பூகோள மயமாக்கல் ரீதியில் இன்று எமதுநாட்டில் ஏமாற்றுத் தனங்கள் அதிகரித்துக்கொண்டிருக் கின்றன. எமது மக்களின் உழைப்பு, வியர்வை, இரத்தம், பணம் யாவுமே சுரண்டப்பட்டுக்கொண்டிருக் கிறது. இந்தநிலைமை தொடரு மாயின் நாட்டில் பேராபத்து விளையக்கூடும்.

புதிய ஜனநாயகக்கட்சியின் பொதுச்செயலாளரான சி.கா.செந்தில வேல நேற்றையதினம் யாழ்ப் பாணம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கக் கேடபோர்கூடத்தில் புதிய ஜனநாயக கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்றபுரட்சிகர மேதினக கூட்டத்தில உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

புதிய ஜனநாயகக்கட்சியின் வடபிரதேச செயலாளர் கா.கதிர்காம நாதன் தலைமையில் நடைபெற்ற இப்புரட்சிகர மேதினக்கூட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் பங்கு கொண்டனர்.

பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் அங்குதொடர்ந் தும் பேசுகையில்,

இன்று நாம் ஒரு முக்கியமான காலகட்டத்திலே நிற்கின்றோம். எமது நாட்டின் அரசியல் போக்கு எவவிதத்தில் மக்களை வழிநடத்தப போகின்றது என்பதுபற்றிச் சிந்திக்க வேண்டும். தமிழ்மக்கள் விழித்துக்கொள்ள வேண்டும். இந்த நாட்டில் அரசியல்போக்கில் அன்றாடத் தொழிலாளர்கள் படுகின்ற துன்பங்கள், துயரங்கள் சொல்லிமாறாது.

உலகமய்மாக்கல் காரண மாக இன்று ஒரே உலகம். ஒரே உத்தரவு, ஒரே குரல், ஒரே மொழி, என்று சொல்வதும் அதை உலகம் ஏற்கவேண்டும் என்பதும் வழமையாகிவிட்டது. எம்மைப் பொறுத்தவரையில் நாம் இத்தகைய உத்தரவுகளுக்கு அடிபணிய மாட்டோம். ஒரேபாஷையில் பேச வேண்டும். ஒரே அணியில் நிற்க வேணடும் என்பதும் எமது நிலைப் பாடல்ல. நாம் உழைக்கும் வர்க்கத் தின் குரலாக நிற்பவர்களே.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று ஒரு நிர்ப்பந்தம் காரண மாகவே பேச்சுவார்த்தைக்கு வந்துள் ளார். இந்தப்பேச்சு வார்ததையின் பின்னணியில அமெரிக்கா, ஜப்பான் மற்றும் மேற்குலக நாடுகள் நிறகின்றன. 19 வருடகாலம் இங்கு இடம் பெற்ற யுத்தத்தினை வளர்க்க உதவியவர்களும் இவர் களேயாவார்கள்.

இங்கு கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. இவற்றினை விற்பனைசெய்ப வர்களும் அவற்றினை அகற்ற உதவுபவர்களும் அமெரிக்கா மற்றும் மேற்குல நாடுகளுமேயாகும். அமெரிக்கா ஈராக்கை அழித்து விட்டது. ஆயினும் எந்தவொரு தமிழ்க்கட்சியுமோ அல்லது பாராளு மன்ற உறுப்பினருமோ இதனை இதுவரை கண்டிக்கவில்லை. இதன் பின்னணி யாவரும் அறிந்ததே ஆகும்.

மேலும், திறந்தபொருளாதார கொள்கையானது நாட்டின் கலாசார சீரழிவுக்கு வழிவகுத் துள்ளது. நடைபெறவுள்ள உலக இந்து மாநாடு எந்தவகையிலும் தமிழ் மக்களின் சுபீட்சத்திற்கு வழிசமைக்கப் போவதில்லை. சாதீயப் பிரச்சினை இன்னமும் முற்றுமுழுதாகத்தீரவில்லை.

அத்துடன், அரசியல் ரீதியில் சிந்தித்து தூரநோக்குடன் முடிவுகளை எடுத்துச் செயற்பட வேண்டிய ஒரு முக்கிய தருணத் திலேயே நாம் அனைவரும் இருக்கிறோம். தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமை அடிப்படை யிலான அரசியல் தீர்வை வற் புறுத்தி அமெரிக்க, இந்திய மேலாதிக்க சக்திகளின் நோக்கங் களை எதிர்த்து நாம் போராட வேண்டும் என குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் புதிய ஜனநாயக் கட்சயின் அரசியல் குழு உறுப்பினர் சட்டத்தரணி கோ. தேவராஜா, க. தணிகாசலம், சி. நவரத்தினம் உட்பட வேறும் பலர் உரை யாற்றினர். (உ-77-4)

# குற்றப்பணம் அறவீடு

(சுதுமலை)

காலாவதியான பிஸ்கட் மற்றும் பால்மா போன்ற உணவுப் பொருட் களை விற்பனை செய்த வர்த்தகாிடம் இருந்து இரண்டா யிரம் ரூபா குற்றப்பணம் அறவிடப் பட்டது.

மானிப்பாய் பட்டினப்பகுதியில் உள்ள வர்த்தகநிலையங்கள்மீது பொதுச சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் பரிசோதனை யின்போது இனங் காணப்பட்ட வர்த்தகர் ஒருவரே நேற்று முன் தினம் மல்லாகம்மாவட்ட நீதி மன்றத் தல் ஆஜர்செய்யப்பட்ட போது குற்றப் பணம் செலுத்தினார். (உ-252)

# மீள்குடியமர்வு கொடுப்பனவு வழங்குவதில் பாரபட்சம்

## தென்மராட்சி மக்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பகுதி மக்களுக் கான மீள்குடியமர்வுக் கொடுப்பனவை வழங்குவதில் பாரபட்சங்கள், இழுத்தடிப்புக்கள் என்பன காட்டப் பட்டு வருவதாக சம்பந்தப்பட்ட மக்கள தரப்பில் புகார் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த கால யுத்தங்களால் அதிகம் பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்கள் தமக்கான மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகள் வழங்கப்படாமை யால் தொடர்ந்தும் தாம் துன்பத் தன் மத்தியிலேயே வாழ்க்கையை ஓட்டி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வீடுகள் சேதமுற்ற வர்கள் வேறு இடங்களில் வசித்து வருவதனால், வீடுகளுக்கு விபரம் சேகரிக்கச் செல்லும் அதிகாரிகள் ஆட்கள் இல்லையென்ற காரணத்தால் திரும்பிச் சென்று விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

# இன்று ஒரு தகவல்

## கணவனும் மனைவியும்!

ஒருவர் மிகவும் அவசரமாக வந்து "சார்! மனிதன் நிம்மதியாக இருப்பதற்கு என்ன வழி?" என்று கேட்டார். சீக்கிரமாக ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொள்ளுங்கள், எல்லாம் சரியாகப் போய் விடும் என்றேன், அவன் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். ஏற்கனவே எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது சார். அதனாலே தான் உங்களிடம் நிம்மதியாக இருப்பதற்கு வழி கேட்கிறேன் என்றார். சரி, இவரும் நம்மைப் போல் தான் என்று நினைத்துக் கொண்டு என்னிடமிருந்த ஒரு சிறிய புத்தகத்தைப் படித்துப் பாருங்கள் என்று தூக்கிக் கொடுத்தேன். கல்யாணத்திற்குப் பிறகும் சந்தோஷமாக இருப்பதற்கு என்ன வழி? என்கின்ற கேள்விக்கு அந்தப் புத்தகத்தில் விளக்கம் இருந்தது. கணவன் மனைவிக்குள் சிக்கல் வராமல் இருப்பதற்கு அதிலே சில வழிகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் என்னென்ன? என்று இப்பொழுது பார்ப்போம்.

குடும்பம் என்று இருந்தால் கோபம் வரத்தான் செய்யும். அது வந்து விட்டுப் போகட்டும். பரவாயில்லை. ஆனால் அந்தக் கோபம் ஒரே நேரத்தில் இருவருக்கும் வந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு சமயத்தில் யாராவது ஒருவர்தான் கோபப் படவேண்டும். மற்றவர் அமைதியாக இருக்க வேண்டும். அதன் பின்னர் இவர் அமைதியானவுடன் அவர் ஆரம்பிக்கலாம். கோபமாக ஏதாவது சொன்னால் உடனே கோபமாகப் பதில் சொல்லக் கூடாது. கொஞ்சம் பொறுத்து கோபம் தீர்ந்தவுடனே அந்தப் பதிலைச் சொல்லலாம். அப்போது பதில் கோபமாக இருந்தால் கூட அது அவ்வளவு பெரிதாகத் தெரியாது.

அற்ப விஷயத்திற்கெல்லாம் காச்- மூச்சென்று கத்திக் கொண்டிருக்கக் கூடாது. உங்கள் இருவருக்குள்ளும் ஒரு தர்க்கம் ஆரம்பமாகிவிட்டதென்று வைத்துக் கொள்ளுங்கள். கடுமையாக இருவரும் விவாதம் பண்ணுகிறீர்கள். உங்களில் ஒருவர் இதில் ஜெயிக்க வேண்டும் என்றால் அது நீங்களாக இருக்கவேண்டாம். அடுத்தவர் ஜெயிப்பதற்கு நீங்கள் துணையாயிருங்களேன், அப்படியென்றால் நீங்கள் கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டும். அவ்வளவு தான். ஏதாவது குற்றம் சொல்ல வேண்டுமா? செய்த தவறைச் சுட்டிக்காட்டவேண்டுமா? விமர்சனம் பண்ணவேண்டுமா? பண்ணுங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், சொல்வதைக் கொஞ்சம் அன்பாக - இதமாகச் சொல்லுங்கள்.

எப்பொழுதோ நடந்த தவறுகளையெல்லாம் இப்பொழுது மறுபடியும் ஞாபகப் படுத்திக் கொண்டிருக்காதீர்கள். நான் அப்பொழுதே சொன்னேன் இந்தப் புடவை வேண்டாமென்று! இப்பொழுது பாருங்கள் கிழிந்து போய்விட்டது. நீங்கள் தான் கேட்கவில்லை என்று ஒரு அம்மா கத்தினார். எப்பொழுது சொன்னீர்களென்று கேட்டால் ஒரு பத்து வருடங்களுக்கு முன்னர் தீபாவளி சமயத்தில் என்கிறார், அது என்ன இன்னமும் புதிதாகவேயா இருக்கும்?

உங்களுக்கு அவர்தான் பெரிது. அவருக்கு நீங்கள் தான் பெரிது. அதைவிட இந்த உலகத்தில் வேறெதுவும் முக்கியமில்லை என்று நினையுங்கள். நீதான் என் உலகம் என்று எத்தனை தடவைகள் சொல்லியிருப்பீர்கள்! அவை வெறும் வசனமாகப் போய்விடக்கூடாது. ஏதாவது ஒரு பிரச்சினையைப் பற்றிக் கடுமையாக விவாதம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்... மிகுதியை நாளைக்குப் பேசிக் கொள்ளலாமென்று, அதை அப்படியே பாதியில் விட்டுவிட்டுப் படுக்கைக்கு போய் விடாதீர்கள். அப்படிப் போனால் தூக்கம் வராது! பிரச்சினையை ஒரு முடிவு பண்ணிக் கொண்டு அதன்பின் தூங்குவதற்குப் போங்கள்.

ஒரு நாளில்ஒரு தடவையாவது உங்கள் ஜோடியைப் பாராட்டி நல்ல விதமாக- கனிவாக ஒரு வார்த்தை சொல்ல வேண்டும் என்று தீர்மானம் பண்ணிக் கொள்ளுங்கள். ஏதாவது தப்புப் பண்ணிவிட்டீர்களா? பரவாயில்லை. அதை ஒத்துக் கொள்வதற்கும், மன்னிப்பு கேட்பதற்கும் தயாராக இருங்கள். அது ஒன்றும் கேவலம் இல்லை. வீட்டிற்குள்ளே தானே கேட்கப் போகிறீர்கள். வெளியில் யாருக்குத் தெரியப் போகிறது. எப்படியோ உங்களுக்குள் சமரசம் ஆனால் சரி!

ஒரு தகராறு என்று எடுத்துக் கொண்டால் குறைந்த பட்சம் இருவர் தேவை. தனியாகவே உட்கார்ந்து கொண்டு "நான் இப்பொழுது தகராறு பண்ணிக் கொண்டிருக்கிறேன்சார்!" என்று யாரும் சொல்ல முடியாது. இருவர் தகராறு பண்ணுகிறார்கள் என்றால் பொதுவாக அந்த இருவரில் யார் அதிகமாகப் பேசுகிறார்களோ அவர்கள் மீதுதான் தப்பு இருக்கும். அதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

இவைகள் தான் அந்தப் புத்தகத்தில் போட்டிருக்கிற வழிமுறைகள். இவ்வளவும் சரியாக வரவில்லை என்றால் பின்பு சொல்லுங்கள் வேறு ஏதாவது புத்தகம் இருக்கின்றதா என்று தேடுவோம்.

ஒரு கணவன் தன்னுடைய மனைவியை அழைத்துக் கொண்டு ஒரு மனோதத்துவ டாக்டரிடம் வந்தார். "டாக்டர் எங்களுக்குக் கல்யாணம் ஆகி முப்பது வருட காலமாக நாங்கள் ஒரு விஷயத்திலே கூட ஒத்துப் போவதில்லை!" என்று ஆரம்பித்தார். உடனே அந்த அம்மா குறுக்கிட்டு அது முப்பது வருஷம் இல்லை முப்பத்திரெண்டு வருஷம் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வன்னியில் இவ்வாரம் முக்கிய சந்திப்புக்கள்

(கொழும்பு)

ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி இவ்வாரம இலங்கை வருவதற்குமுன்னர் நேற்று இநதியாவுக்கு விஜயம் செய்துளளார்.

நாளை இலங்கைவரும் அகாஷி அது வரையில் புதுடில்லியில் தங்கியிருந்து இந்தியத் தலைவர்களைச் சற்தித்து இலங்கையின் சமாதான நடவடிக்கையில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள் பற்றியும் எதிர்வரும் யூன் மாதம் 9,10 ஆம் திகதிகளில் ரோக்கியோவில் நடைபெறஉத்திதேசிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மகாநாடுபற்றியும் பேச்சுக்கள நடத்தவுள்ளார்.

இலங்கையில் அவர் ஆறு நாட்கள் தங்கியிருந்து பல்வேறு சமாதான ஊக்க நடவடிக்கைளிலும் ஈடுபடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, முதல் முறையாக இவர் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்து பேசவிருக்கிறார்.

இதற்கு முன்னரும் அகாஷி பிரபாகரனைச் சந்திப்பதாக இருந்த போதும் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இங்கு இல்லாத நிலையில் உரையாடல்கள் ரத்துச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷமன் கதிர்காமர் ஆகியோரையும் அகாஷி சந்தித்துப் பேசவுள்ளார்.

சமாதானப் பேச்சுக்களை மீணடும் தொடக்குவது பற்றியே இவர் முக்கியமான பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அன்ரன் பாலசிங்கம் அடுத்த வாரம் இலங்கை வரும் போது பிரபாகரனுடன் பேச்சுக்கள் நடததப்படும். இதேவேளை, நோர்வே பிரதிவெளி யுறவு அமைச்சர் விடார் ஹெல்கீசன மற்றும் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரும் இவ்வாரம் வன்னி செல்லவுள்ளனர்.

இதேவேளை, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடஇன்று வெள்ளிக்கிழமை இந்தியா செல்லவுள்ளார்.

அங்கு சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் பற்றி இந்திய அரச உயர் அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறவுள்ளதுடன் இது விடயத்தில் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

தவிரவும், மிலிந்த மொறகொட நாளை நாடு திரும்பும் போது அவருடனேயே ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியும இலங்கை வருவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ)

# சமாதானப் பேச்சுக்கு ஊக்கமளிப்பது இந்நாட்டு மக்களது கடமை

## ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவருவதை விட, தீர்வுகள் மூலம எட்டப்படுகின்ற சமாதானத்தை கட்டிக்காப்பதே மிகவும் கடினமான விடயமென மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், சமாதானத்தை தக்க வைத்துக் கொள்வதன் பொருட்டு நாம் அனைவரும் பெரும் அர்ப்பணிப்புக்களைச் செய்யவேண்டியுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள ஒரு கட்டத்தில் மிகவும் வெற்றிகரமாக நடைபெறுகின்றன. அதே வேளை, சில நேரங்களில் ஏற்படும் பின்னடைவுகள் அந்தச்சமாதானத்தை கேள்விக்குறியாக்குவதாக தோன்றுகிறது.

எனவே, சமாதானத்தை நிலைநிறுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். சமாதானத்திற்கு ஆதரவாக குரல் கொடுக்க வேண்டும்.

அரசு - புலிகள் இடையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடையில் முறிந்து



போனாலும் இருபகுதியினரும் பேச்சை முன்னெடுக்க அழுத்தம் கொடுப்பதை மக்களின் கடமை என்றார். (உ-10)

# இராசி பலன்

**02.05.2003**

**(சித்திரை 19, வெள்ளி)**

**பிரதமை - மு. இ. 8.12 வரை**
**பரணி பி.ப 1.46 வரை**
**இராகுகாலம் 10.27 - 11.57**
**சுபநேரம் 5.57 - 7.27**

**கார்த்திகை விரதம்**

**மேடம்**
புதியபொருள் சேர்க்கை, சயனசுகம், கீர்த்தி, காரியஅனுகூலம்

**இடபம்**
பிதா சிந்தை, சுபசெலவு, உஷ்ண வியாதி, காரிய அலைச்சல்

**மிதுனம்**
தெய்வதரிசனம், தொழில் சிந்தை, காரிய அனுகூலம், பிறர் ஆதரவு

**கடகம்**
கடின உழைப்பு, நல்லசெய்தி, சுபநிகழ்ச்சி, முயற்சி கைகூடும்

**சிங்கம்**
ஆன்றோர் மதிப்பு, வீண்பயம், வயிற்றுவலி, முயற்சிதாமதம்

**கன்னி**
வீண்தொல்லை, போசனசுகம், தொழில்கஷ்டம், உடல் வியாதி

**துலாம்**
திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, கலந்துரையாடல், எடுத்தகாரியம் கைகூடும்

**விருச்சிகம்**
நோய்குணமடைதல், புதிய சிந்தை காரிய நன்மை, தெய்வதரிசனம்

**தனுசு**
தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, காரியஇடையூறு, வேலைக் கஷ்டம்,

**மகரம்**
கல்வியில் ஆர்வம், தன்னம்பிக்கைக் குறைவு, எடுத்தகாரியம் தாமதமாகும்

**கும்பம்**
வாக்கு வன்மை, நல்லகாரியம், இனிய அனுபவம், பண வருவாய்

**மீனம்**
மதிப்புக்குறைவு, பொருள் விரயம், முயற்சி தாமதம், போசன சுகம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்.**

# மக்கள் மனக்குறை...

## கொடிகாமம் பொதுநூலகத்தின் குறைபாடுகள் நீங்குமா?

கொடிகாமம் நூல் நிலையம் 1982ம் ஆண்டு பொது மக்களின் ஒத்தாசையுடன் ஸ்தாபிக்கப்பட்டு 2000ம் ஆண்டு வரை பொதுமக்களிற்கு ஓர்வரப் பிரசாதமாக இருந்து வந்தது சகலருக்கும் தெரிந்ததே.

இங்கு அநேக மாணவர்கள், பொதுமக்கள், தங்கள் அறிவுப் பசியை தீர்த்தார்கள். இன்று இந்த நூல் நிலையத்தைப் பார்க்கும் போது, நலிவுற்று ஓர் வசீகரத் தோற்றமின்றி காணப்படுகின்றது.

இந்நூல் நிலையமானது கொடிகாமத்தில் பிரதான பாடசாலையான திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திற்கு அண்மித்ததாக அமைந்தது எம்பிரதேசத்திற்கு பெரும் வரப்பிரசாதமாகும்.

இங்குள்ள நூல்கள் 2000ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது தொலைந்தது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இந்நூல்களை திரும்பப் பெற்று தரும்படி பொதுமக்கள் கேட்டபொழுதும் இது சம்பந்தமாக எவரும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. இதனால் இந்நூலகமானது காலை 8.00மணி தொடக்கம் மாலை 5 மணிவரை திறந்திருந்தும் எதுவித பயனும் இல்லை. முக்கியமாக A/L படிக்கின்ற மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் ஏனையோர் நூல்களை தேடிய வண்ணம் பார்த்து ஏமாந்து செல்கின்றனர்.

எனவே இது தொடர்பான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய சாவகச்சேரி பிரதேச சபையினரும், இது சம்பந்தமான மேலதிகாரிகளும் உடனடியாக நடவடிக்கை எடுத்து மாணவர்களுக்கு உதவுவது அவசியமாகும்.

குமார்.

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின் அல்லது.
– குறள்

வலம்புரி

## அகல்வதா? அரக்குவதா?

யாழ்நகர மையத்தில் இருக்கும் சுபாஸ் விடுதி, ஞானம்ஸ் விடுதி ஆகியவற்றில் இருந்து இராணுவம் வாபஸ் ஆகும் என இராணுவப் பேச்சாளர் சரத் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருதரப்புக்கும் இடையே நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டதன் பிரகாரம் யாழ்.மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவும் வகையில் நகர மையத்தில் உள்ள இரண்டு விடுதிகளிலும் உள்ள இராணுவத்தை வாபஸ் பெறுவதென்ற முடிபு எடுக்கப்பட்டது.

இரு தரப்புப் பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட இம்முடிபு பல மாதங்கள் கடந்த நிலையிலும் இன்று வரை அமுல் படுத்தப்படவில்லை. இதிலிருந்து அரசு என்னதான் உத்தரவாதங்களை வழங்கினாலும்,அதற்கு படைத்தரப்பு இணங்காதென்பதை புரிந்து கொள்வது அவசியமாகும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களின் போது ஞானம்ஸ் விடுதி,சுபாஸ் விடுதி ஆகியவற்றில் இருந்து இராணுவத்தை மீளப் பெறுவதென இணங்கப்பட்டதே தவிர யாழ். நகரப் பகுதியை அண்டி புதியதோர் முகாம் அமைப்பதெனத் தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் இப்போது யாழ். கோட்டைப் பகுதியில் புதிதாக இராணுவப் படைத் தளம் அமைக்கும் முயற்சி மும்முரமாக நடைபெற்று வருகிறது. அதாவது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவி செய்வதாகக் கூறி யாழ்.நகர மையத்தில் இருந்து இராணுவத்தை அகற்றுவதென்ற உறுதி மொழிக்கு மாறாக, இராணுவ முகாமை நகர்த்தும் தந்திரம் சமாதான முயற்சிக்கு குந்தகம் விளைவிப்பதாக அமையும்.

யாழ்நகர மையத்தில் உள்ள இராணுவ முகாமை அற்றுவதற்குப் பதிலாக கோட்டை இராணுவ முகாமை மீண்டும் புதுப்பித்து,அதில் நிரந்தரமாக படை முகாம் அமைப்பதே படைத் தரப்பின் நோக்கமாகும.

இங்குதான் அரசின் சமாதான முயற்சியில் தமிழ் மக்களுக்கு சந்தேகமும் கேள்வியும் எழுகிறது.அரசும் புலிகளும் பேச்சுக்கள் நடத்தி நிரந்தர சமாதானத் தீர்வை அடைவார்களாயின் வடக்குக் கிழக்கில் இராணுவ முகாம்கள் இருப்பது சாத்தியமாகாது. அவ்வாறாயின் இந்தியாவின் உதவியோடு இலங்கை இராணுவம் யாழ்.கோட்டைப் பகுதியில் முகாம் அமைக்க வேண்டியதன் அவசியம் ஏன் என்ற கேள்வி எழுகிறது.

ஆக அரசு விடுதலைப் புலிகளோடு சமாதானப் பேச்சுக்களை நடத்தி வந்தாலும் அவர்களுக்கு விடுதலைப் புலிகள் மீது முழுமையான நம்பிக்கை ஏற்படவில்லை. இதனால் யாழ்.நகர மையத்தில் அதுவும் தீவகத்தையும் யாழ்ப்பாணத்தையும் தொடர்புபடுத்தும் பண்ணை தாம்போதியின் நுழைவாயிலில் இராணுவ முகாம் இருப்பது மிகவும் முக்கியமென படைத் தரப்பு கருதுவதால்,படை அகல்வு என்பதற்குப் பதிலாக படையை அரக்குவதென முடிபு செய்யப்பட்டுள்ளது.

# இளந்தலைமுறையினர் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட உலக இந்து மாநாடு உதவ வேண்டும்

சமயம் என்பது ஆறு, நெறி, வழி, தருமம் எனும் பல்வேறு சொற்களால வழங்கப்பட்டுவரினும் அதன் தலையாய நோக்கம் மக்களின் மன உணர்வுகளை சென்றவிடத்தால் செலவிடாது ததொரி இநன்றின்பால் உய்ப்பதேயாகும், அன்றாட வாழ்க்கையில் மக்கள் பல்வகைத் தேவைகள், தடைகள், இன்னல்கள், குறைகள், பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இவற்றை துணிவுடன் எதிர்கொள்ளவும், பல்துறையிலும் ஈடுபட்டுள்ளோர் அவற்றின் நீங்கி- புறவாழ்க்கையை விட்டு பிரிந்து - அகத்தளவில் - மனத்தளவில் வாழ்கின்ற வாழ்க்கையில் மனஅமைதியும, ஒருமையும், நிறைவும் பெறவும் சமயம் அருந்துணையாக இருப்பது என்பதில் ஐயம் எள்ளளவுமில்லை.

*இளைஞர் சமுதாயம்*

அறிவியல் ஆய்வுகளாலும், புதிய கண்டுபிடிப்புக்களாலும், பகுத்தறிவு வாதிகளின் எதிர்வாதங்களாலும், ஈர்ப்புண்ட இளைஞர்சமுதாயம சமயநெறியை ஏற்க மறுத்து எதிர்ப்பதைக் கண்டு அஞ்சியோ, அவர்களைத் துன்புறுததியோ பயனில்லை. அறிவுத்துறையில் சிறந்துவிளங்கிய அறிஞாகளும்கூட தங்கள் வாழ்வின் முற்பகுதியில் ஆற்றிய அறிவுத் துறைப் பணிகளால் தளர்ச்சியும், மனச்சோர்வும் எய்தியபோது அவர்களை மீண்டும் நன்னலம் பெறவும், அமைதியுறவும் சமய அறிஞர்களும், இலக்கியங்களும், அவற்றின் கோட்பாடுகளுமே உதவிபுரிந்தனஎன்பதை வரலாற்றேட்டின்மூலம் மெய்ப்பித்து இளைஞர்களை பரிந்தேற்க வேண்டும்.

**கவிமாமணி, மதுரகவி, காரை.எம்.பி.அருளானந்தன்**
**(2ம் உலகமாநாட்டு யாழ். பிராந்திய மாநாட்டுகுழு செயற்குழுஉறுப்பினர்)**

நல்லதன் நலனும் தீயதன் தீமையும்இல்லென்போரையும் நல்வழிப் படுத்தி உண்மைஉணரச் செய்வது சமயம்ஆகும். உலகம் முழுவதும் பரந்துள்ள இந்துசமயம் உன்னதமான சிறப்புக்களை எய்தி ஓங்கவேண்டுமெனும் உளப்பாங்குடன் எடுக்கப்பெறும் இம்மாநாடு எண்ணிய நற்பயனை எண்ணியவாறே விளைவிக்கவும், மீண்டும் இந்துசமயத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட பழமையையும் சீர்மையையும் எளிமையையும் எதிர்ப்புக்களுக்கிடையிலும் ஏற்றம் பெற்றுள்ள அதன் நிறைவையும்விளக்கும் வகையில் ஈழத் தமிழினதத்தின் மேன்மையை அவர்கள் எதிர்பார்க்கும் இலககை எய்த இ் மாநாடு வழிசெய்ய வேண்டுமென்பதே அனைவரினதும் வேணவா!

*அறவழிநிற்றல்*

சைவமும் தமிழும்எங்களின் கண்கள். மண்ணில்நல்லவண்ணம் வாழ ஆன்மீக விழுமியஅறநெறி இன்றியமையாதது. அதுவும் இளந்தலைமுறையினருக்கு அவசிய மானதொன்றாக உணரப்படுகிறது. 'மனமதுசெம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்' என்பார்கள். உண்மைதான் மனதைசெம்மைப்படுத்த ஆரோக்கியமாக்க 'அறவழிநிற்றல்' அவசியம். அதன்பின்னால் எதுவும் எமக்கு இலகுவாகக் கைகூடிவிடும்.

எனவே நடைபெறும் இரண்டாம உலக இந்துமாநாடு அங்குநடைபெறும் நிகழ்வுகள், இடம்பெறும் சிறப்புரைகள், வாசிக்கப்படும் ஆய்வுக்கட்டுரைகள், காண்பிக்கப்படும் கண்காட்சிகள், அனைத்திலும் ஒட்டுமொத்தமாக நிறைவான பயனை விளைவிக்கக்கூடிய வகையில் மானுடத்தை நெறிபபடுத்தும் விததத்தில் வெற்றி சேர்க்கும் வகையில் அமைய வேண்டும் என எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமானின் திருத்தாளகளை இறைஞ்சி நிற்கின்றோம்.

## சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க ஆசிய நாடுகள் கூட்டு

(கொழும்பு)

ஆசிய நாடுகளுக்கிடையே நடைபெறும் சட்டவிரோத செயல்களை தடுப்பதற்கான கூட்டுநடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு ஆசிய நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவில் நடைபெற்ற 35 நாடுகள் பங்குகொண்ட மாநாட்டில் கலந்துகொண்டு விட்டு நாடு திரும்பிய பின்னர் அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

இம்மாநாடு பற்றி கருத்து வெளியிட்ட ஜோன் அமரதுங்க,

அந்தந்த நாடுகளுக்கிடையே நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்காக நாடுகளுக்கிடையிலான உறவை வளர்த்துக் கொள்ளும் நோக்கில் இம்மாநாடு நடைபெற்றது.

மேலும், நாடுகளுக்கிடையே சட்டவிரோத குடியேற்றம்,ஆயுதங்கள் மற்றும் போதைப் பொருட்களை சட்டவிரோதமாக கடத்துதல் ஆகியவற்றை தடுப்பது குறித்தும இம்மாநாட்டில் ஆராயப்பட்டது என்றார்.

இதேவேளை, சட்டவிரோத குடியேற்ற மற்றும் ஆயுதம், போதை வஸ்து கடத்துதல் என்பவற்றை தடுப்பது தொடர்பாக அவுஸ்திரேலியாவிற்கும்-இலங்கைக்கும் இடையில் ஒப்நதமொன்று அண்மையில் கைச்சாத்திடப்பட் டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## இந்து மாநாட்டை ஒட்டிய நிகழ்வுகள

(யாழ்ப்பாணம்)

இன்று கொழும்பில் ஆரம்பமாகவுள்ள இரண்டாவதுஉலக இந்து மாநாட்டை ஒட்டி இன்றுமுதல் எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையான 5 தினங்கள் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீசபீச ஐயபன் ஆலயத்தில் சமயசம்பந்தமான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த வகையில், இன்று பாலர் பாடசாலைச் சிறார்களின்நிகழ்வுகள் மற்றும் பரிசளிப்புவிழா என்பனவும் மாலை மங்களஇசை, இன்னிசைக் கச்சேரி, சிறப்புச் சொற்பொழிவு என்பனவும் இடம்பெறவுள்ளன. (உ)

## கிராமஅலுவலர்பிரிவு ரீதியாக குடும்ப விபரம் சேகரிப்பு

(கல்வயல்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் தென்மராட்சிப்பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர்பிரிவில்உள்ள சுமார் 18 ஆயிரம் குடும்பங்களினது பெயர் விபரங்கள் மற்றும் அவர்களது குடும்ப நிலைவரங்கள் ஆகியவற்றை வினாக்கொத்துமூலம் திரட்டவுள்ளனர்.

இதன்மூலம் இம்மக்களின் தேவைகள் மற்றும் நிலைமைகள் இனங்காணப்பட்டு வேண்டிய அபிவிருத்திப் பணிகள் நலனோம்பு உதவித் திட்டம் என்பன வழங்கப் படவுள்ளன.

யூ.என்.எச்.சி.ஆர்.மற்றும் புனர்வாழ்வு அமைச்சு,சிரான்அமைப்பு என்பன இவ் உதவித்திட்டங்களை அமுல்படுத்தவுள்ளன. (உ-36)

## பொது நூலகம் செயலிழப்பு

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழுள்ள மாமுனை முதல் கட்டைக்காடு வரை மக்கள மீளக்குடியேறியுள்ள போதும் செம்பியன்பற்றில் உள்ள பொது நூலகம் இது வரை இயங்காதுள்ளது. (உ-42)

## விடைத்தாள் திருத்தும்பணி மத்தியகல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்றுவரும்கபொ.தஉயா தரப் பரீட்சையின் முதல்கட்ட விடைத்தாள் திருத்தும்பணி எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரையும் இரண்டாம்கட்டவிடைத்தாள் திருத்தும்பணி எதிர்வரும் 27 ஆம்திகதி முதல் ஜூன் மாதம் 10ஆம் திகதி வரையும் யாழ்.மத்தியகல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இருப்பினும் திட்டம்இட்டவாறு யாழ். மத்தியகல்லூரி இரண்டாம் தவணைக்காக எதிர்வரும் 21ஆம் திகதி திறக்கப்படும் என அதிபர் கே.இராஜதுரை அறிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி விடைத்தாள் திருத்தும் 3ஆம்கட்டப்பணியும் இப் பாடசாலையில் இடம் பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## குற்றப்பணம் அறவீடு

(சுதுமலை)

காலாவதியான பிஸ்கட் மற்றும் பால்மா போன்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்த வர்த்தகாடம் இருந்து இரண்டாயிரம் ரூபா குற்றப்பணம் அறவிடப்பட்டது.

மானிப்பாய் பட்டினப்பகுதியில் உள்ள வர்த்தகநிலையங்கள்மீது பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்டதிடீர் பரிசோதனையின்போது இனங்காணப்பட்ட வர்த்தகர் ஒருவரே நேற்று முன்தினம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தல் ஆஜர்செய்யப்பட்ட போது குற்றபணம் செலுத்தினார். (உ-252)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சி.இ.எவ்.இ.தொழில் முயற்சியாளர் ஒன்றியப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் கை.அ.ச.முகாமையாளர் தெ.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## ஊர்திகள் கொழும்பை அடைந்தன

(கொழும்பு)

கொழும்பில்நடைபெறும் இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு சென்ற ஊர்திகளை இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன், மறறும் இந்துசமயவிவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் ஆகியோர் பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள இந்துசமயவிவகார அலுவலகள அமைச்சின் அலுவலகமுன்றலில் வைத்து நேற்று வரவேற்றனர். (உ)

## அடிப்படை வசதிகளற்ற பிரதேச செயலகம்

(செம்பியன்பற்று)

அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இவ் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் கட்டடப் பணிகள் எதுவும் இது வரை மேற் கொள்ளப்படவில்லை.

இதனால் அலுவலக நிர்வாக நடவடிக்கைகளை மேற் கொள்வதில் பல அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக கூறப்படுகின்றது. (உ-42)

## விபத்தில் மீன்வியாபாரி படுகாயம்

(நவக்கிரி)

நீர்வேலி கரந்தன் சந்தியில் அண்மையில்ஏற்பட்ட மோட்டார் சைக்கிள்-டொல்பின் வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற மீன் வியாபாரி படுகாயமுற்றார்.

அச்சுவேலி மேற்கைச்சேர்ந்த ச.அருமைத்துரை(வயது 42)என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார்.

இவர் தற்போது சிகிச்சையின் பொருட்டு அச்சுவேலி அரசினர் வைததியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-233)

## சிறுமியின் தோடு அபகரிப்பு

(ஓட்டுமடம்)

வீட்டுமுற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியுடன் நயமாகிப் பேசிய திருடன் அச்சிறுமியின் தோட்டை அபகரித்துச் சென்றுள்ளான்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை ஓட்டுமடம்பகுதியில் இடம்பெற்றது. இதேவேளை, இப்பகுதியில் இவ்வாறானதிருட்டுகள்தொடர்ந்தும் நடைபெற்றுவருவதாகக் கூறப்படுகிறது. (உ-61)

## தினசரி தியானம்

### ஊற்றுவழி

எத்தனை புஜ்யங்கள் இருப்பினும் அவற்றுக்கு முன்னால்1 என்றஎண்ணைச் சேர்க்காவிடின் அவற்றுக்கு இயல்பான மதிப்பில்லை. இதைப்போன்றே நீங்கள் இறையருள்சார்ந்த ஆன்மீகச் செல்வத்தை அடையக் கடும் முயற்சி செய்யாவிடின் உங் களையே நீங்கள் அறிந்துகொள் முயற்சிஎடுக்காவிடின் மூவுலகங்களின் செல்வங்களும் மதிப்பற்றவைகளாகவே இருக்கும். ஆகவே, ஆன்மீகவாழ்க்கையை மேற்கொள்ளுங்கள். உங்களில் உறையும்பரம்பொருளை முதலில் நாடுங்கள். அவர்தாம் தெய்வீகஉடைமைகள், தெய்வீகஆற்றல், தெய்வீகஅழகு ஆகியவற்றின் ஊற்றுவழியாகும்.

சுவாமி சிவானந்தர்

## வெடி பொருட்கள் தளையடியில் அழிப்பு

(திருநெல்வேலி)

மனிதநேய கண்ணிவெடிஅகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்டஒரு தொகுதி வெடி பொருட்கள் நேற்றுமுன்தினம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான தாளையடியில் வைத்து அழிக்கப்பட்டன. (உ-43)

## மீள்குடியமர்வுக் கொடுப்பனவு

(நெல்லியடி)

கரவெட்டி பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட மீளக்குடியமர்த்த மக்களுக்கான மீள்குடியமர்வுக்கொடுப்பனவு எதிர்வரும் 4 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை வழங்கப்படவுள்ளது.

அன்றையதினம் காலை 9 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலகம், நாவலர் மடம் சமுர்த்திவலம்11,உடுப்பிட்டி சமுர்த்திவலயம்-1, உடுப்பிட்டி சமுர்த்தி வலயம்-3 ஆகிய வற்றில்வைத்து இக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. (உ-44)



# எதிரி எம் மண்ணை விட்டு நீங்கும் போது எமது பிரச்சினைகளும் நீங்கிவிடும்!

## மேதினக் கூட்டத்தில் இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)

**தமிழர்களின் சேனையான புலிப்படையின் பலத்தை மேலும் அதிகரித்து,தமிழர்கள் ஓரணியில் திரள்வார்களாயின் தமிழர்களின் இலக்கு நிச்சயமாக நிறைவேறும்.**

**இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.**

நேற்றைய தினம் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற மேதின நிகழவில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில்;

தமிழர்களின் படைப்பலம் உறுதியாக இருக்கும் வரை தமிழர்களை யாராலும்,எந்த சக்தியாலும் புறந்தள்ளிவிட முடியாது. அவ்வாறு புறந்தள்ளிவிட முற்பட்டால் கூட அதன் பாதிப்பு தமிழர்களுககுரியதாக இருக்காது.எனவே தமிழர்களையும்,அவர்களது இலக்குகளையும் எவராலும் புறந்தள்ளிவிட முடியாத அளவிற்கு தமிழர்கள் தங்களை இராணுவ பலத்திலும்,அரசியல் பலத்திலும் ஸ்திரப்படுத்த வேண்டும்

இவ்வாறு இராணுவ பலத்திலும், அரசியல் பலத்திலும்தமிழர்கள் தங்களை ஒரு நிலைபடுத்தும் பொழுது,வாழ்வாதாரப் பலமும், பொருளாதார பலமும் மேம்படும் ஓர் சூழ்நிலை உருவாகும்.எதிரி எமது மண்ணில் பிரசன்னமாய் இருக்கும் வரை பிரச்சினைகள் இருந்து கொண்டேயிருக்கும்.

எதிரி எம் மண்ணில் இருந்து எப்போது இல்லாது போகிறானோ, அப்போதுதான் எமது மக்களுடைய பிரச்சினைகளும் தீர்ந்து போகும்.எனவே எமது மண்ணில் எதிரியின் பிரசன்னம் இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் அவ்வாறான ஒரு நிலையை உருவாக்கும் சக்தி எமக்கும்,எமது மக்களுக்கும் உண்டென்பதை யிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஏனெனில் எமது மக்களினதும், போராளிகளினதும் தியாகம் நிறைந்த அர்ப்பணிப்புகளும் ஈகமும்தான் இதற்குக் காரணம்.

ஆனையிறவுப் படைத் தளம் வெற்றி கொள்ளப்பட்டமை எமது மக்களது வாழ்வின் வெற்றியாக அமைந்துள்ளது.அத்துடன் உலகின் முதன்மையான போராட்ட சக்தியாகவும் எம்மை மிளிர வைத்துள்ளது.இந்த நிலையில் நாமும் எமது மக்களும் உறுதி தளராது ஓரணியில் செயற்படுவதன் மூலமே எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் ஆனையிறவுப் படைத் தளத்தை வெற்றி கொண்டதன் மூலம் தமிழர்களை ஒரு போதும் வெற்றி கொளள முடியாதென்ற உண்மை பேரினவாதிகளுக்கு உணர்த்தப் பட்டது.இத்தகைய பின்னணியில் தமிழர்கள் தங்களது இலக்கை துரிதமாக அடைந்து கொள்வதற்கு தலைவரின் வழி நடத்தலின் கீழ் அணிதிரள்வது இன்றியமையாததாகும் என்றும் கூறினார்.(த-4)

---

### நம்பியாரின்...

இந்திய முன்னாள்இராணுவத் தளபதி சதீஸ் நம்பியாரின் 2வது அறிக்கை இலங்கை அரசிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் உள்ளவாறு உயர் பாதுகாப்பு வலயம் மீள் அமைப்பு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் ஞானம்ஸ், சுபாஸ் விடுதிகளில் உள்ள இராணுவத்தினரை வேறு இடங்களிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

---

### ஈழத்தமிழர்...

அமைப்புக்களும் 126க்கு மேற்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்களும்,சர்வதேச இயக்கங்கள் மற்றும் மனித நேய இயக்கங்கள் என்பனவும் கலந்து கொண்டன. (ம)

---

### யாழ்...

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாநில இந்து மாநாட்டின் இறுதி நாளான 10-ம் திகதி பொது நூலகம் திறந்து வைக்கப்படும் எனவும் இதற்கான உத்தரவை பிரதமர் ரணில்விக்கிமசிங்கா விடுத்துள்ளதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

புனரமைக்கப்பட்ட பொது நூலகம் கடந்த பெப்ரவரி மாதம் 10-ம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந்தசங்கரியினால் திறந்து வைக்க ஏற்பாடாகியிருந்ததும் முழுமையாக யாழ்.பொது நூலகம் புனரமைக்கப்படாத நிலையில் அவசரப்பட்டு அதனை திறந்து வைக்கக் கூடாதென பொது அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததால் பொது நூலகத் திறப்பு விழா இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டதும் அதன் விளைவாக யாழ். மாநகரசபை முதல்வர் உட்பட 14 உறுப்பினர்கள் தங்கள் பதவியை இராஜிநாமாச் செய்ததும் இங்கு குறிப்பிடத் தக்கது. (ந)

## புலிகளின் நிலைப்பாடு குறித்து பிரதமர் அறிக்கை வெளியிடுவார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில இருந்து தற்காலிகமாக விலகிக் கொள்ளப் போவதாக அறிவித்திருந்தமையை அடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அதனை விளக்கி 6-ந் திகதி பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை விடவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் விடப்படவுள்ள இந்த அறிக்கையில் தற்கால அரசியல், பாதுகாப்பு நிலைமைகள் குறித்த விடயங்கள்,மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தியமை பற்றி பிரதமர் விளக்கவுள்ளார்.

பிரதமரினால் வெளியிடப்படும் அறிக்கை தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் நடத்துவதா இல்லையா என்பது குறித்து எதிர் வரும் 5-ம் திகதி நடை பெறவுள்ள கட்சித் தலைவர்களின் மாநாட்டில் கலந்துரையாடப்பட்ட பின் முடிபு எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## தென்னாபிரிக்காவில் வாகன விபத்து 80 தொழிலாளர்கள் கோரப் பலி

(கேப்டவுன்)

தென்னாபிரிக்காவின் மத்திய பகுதியில் சாம்றொக் என்னும் இடத்தில் இடம் பெற்ற பயங்கர வாகன விபத்தில் 80 தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்காவின் மத்திய பகுதியில் இடம் பெறவிருந்த மேதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக 90 தொழலாளர்களை ஏற்றிக் சென்ற பஸ வண்டி அணைக்கட்டு. ஒன்றுடன் பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானதினாலேயே பஸ் வண்டியில் பிரயாணம் செய்த 80 தொழிலாளர்கள் கொல்லப் பட்டனர்.

இந்த விபத்து நடை பெற்ற இடத்தில் இருந்து 5 பேரின் சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய சடலங்களை தேடிக் கண்டு பிடிப்பதில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

---

### புதிய...

தாழும் உள்ள விடயங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

தாங்கள் கடிதத்திற் குறிப்பிட்டதற்கமைய படைமுகாம் அமையவிருக்கும் இடம். தீவகத்திற்குச் செல்லும் நுழை வாயிலில் யாழ்.பண்ணை வீதியிலும்,பொதுமக்கள் பெருமளவில் கூடும் இடங்களான யாழ். பிரதான தபாற் கந்தோர் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஸ்ரீலங்கா ரெலிகொம்,வீரசிங்கம் மண்டபம், மீன் சந்தை, விளையாட்டரங்கம் மற்றும் மக்கள் நடமாடும் இடங்களுக்கு அண்மையில் அமைவது சீ.எவ்.ஏயின் கருத்துக்களுக்கு முரணாக அமைவதோடு அமைதி நிலை தோன்றும் என்ற எதிர்பார்ப்புக்களுக்கும் குந்தகமாக அமைகிறது.

முன்னைய ஆலோசனைகளுக்கு மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பும் கிளர்ச்சியும் தோன்றியிருந்ததை இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதென எண்ணுகிறேன். தற்போது புதிய ஆலோசனையும் கூட மக்கள் மத்தியில் கிளர்ச்சியை மாத்திரமல்ல,ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் தூண்டுவதை தவிர்ப்பது இயலாததாகும்.

இவ்வாலோசனைகள் மக்கள் மத்தியில் மனக்குழப்பத்தையும் கலக்கத்தையும் கொடுப்பது எமது இலட்சியங்களான மற்றும் நம்பிக்கை, நல்வாழ்வு ஆகியவற்றைத் திசை திருப்பி விடலாம் என்ற உண்மையை நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என எண்ணுகிறேன்.

யாழ்.குடாநாட்டிற்குள்ளேயே இடம் பெயர்ந்த பெருமளவு மக்கள் திரும்பவும் தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பமுடியாமலும் அன்றாட வேலைகளில் ஈடுபட முடியாமலும் கஷ்டப்படுவதற்கு முக்கிய காரணம் தொடர்ந்தும் அவர்களின் குடிமனைகளில் பாதுகாப்புப் படையினர் இருப்பதேயாகும்.இவ்விடயம் தங்களுக்கும் நன்றாகத் தெரியும்.

எனவே புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக மக்கள் பெருமளவில் வாழும் பகுதிகளில் பாதுகாப்பு வலயங்களை அமைக்கும் விடயத்தில் அதிக கவனம் செலுத்தி நல்லதொரு முடிவை எடுப்பீர்களென நம்புகிறேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

---

### தமிழர்...

பேரணி கல்லூரி மைதானத்தை வந்தடைந்ததும் அங்கு பொதுக் கூட்டம் இடம்பெற்றது. முன்னாள கிராம சேவையாளர் க. சிவராசா தலைமையில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் பொதுச் சுடரினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி,நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில் மற்றும் இந்து, முஸ்லிம் மதகுருமார்கள் ஏற்றி வைத்தனர்.

யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் தமிழீழக் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசியத்தின் கூட்டு மே நாள் பிரகடனம் யாழ். பல்கலைக்கழக மாணவப் பிரதிநிதியால் வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர மாவை.சேனாதிராசா,யாழ். மாவட்ட இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத் தலைவர் குமாரசாமி, கூட்டுறவுச் சபையின் மகளிர் அமைப்பு சார்பாக திருமதி வே.செல்வரட்ணம், ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ சுரேஸ் அணித் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தமிழ்க் காங்கிரஸ் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சீ.வீ.கே.சிவஞானம் வடமாகாண கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் சூரியகுமார் வடமாகாணப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் சார்பில் சி. தவராசா ஐக்கிய சோசலிசக் கட்சி சார்பில க.செல்வராசா,வங்கி ஊழியர் சாரபில் பொன். கணேசமூர்த்தி தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுபபாளர் தமிழினி,யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உட்பட பலர் உரையாற்றினர்.

இதேவேளை பேரணியில் கலந்து கொண்ட ஊர்திகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஊர்திகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. முதல் இடத்தைப் பெற்ற புங்குடுதீவுப் பல நோக்கு கூட்டுறவுச் சங்க ஊர்திக்கு பாரா்ளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவும் இரண்டாம் இடத்தைப் பெற்ற துறையூர் கடற்றொழிலாளர் சங்க ஊர்திக்கு யாழ். மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர் இமயவனும் 3-ம் இடத்தைப் பெற்ற சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊர்திக்கு மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினியும் பரிசில்களை வழங்கினர்.

தொடர்ந்து நடைபெறவிருந்த இறுதி நிகழ்ச்சிகள் மழை காரணமாக நிறுத்தப்பட்டது. (த-4-43-51)

## முக்கிய கூட்டம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்தில் புற்று நோய் வைத்தியசாலையை அமைப்பது தொடர்பாக முக்கிய முடிவுகளை எடுக்கும் உயர் மட்ட மாநாடு இனறு முற்பகல் 11மணிக்கு மனித நேய அமைப்புகளின் ஒன்றியத்தில் நடை பெறவுள்ளது.(த-43)

## விஷேட அபிடேகம்

(யாழ்ப்பாணம்)

இன்று ஆரம்பமாகும் இரண்டாவது உலக இந்து மாநாட்டைச் சிறப்பிக்கும் வகையில் நீர்வேலி செல்லக்கதிர்காம ஆலயத்தில் இன்று விஷேட அபிடேக ஆராதனைகள்,பூஜை வழிபாடுகள் கூட்டுப் பிரார்த்தனை,அலங்கார உற்சவம என்பன இடம் பெறவுள்ளன. (உ)


உ

# உலக இந்து மாநாட்டைச் சிறப்பிக்கும் விஷேட உற்சவம்

**நீர்வேலி**

**அருள்மிகு செல்லக் கதிர்காம கோவில்**

**இன்று (2-5-2003)**

**வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணி**

அபிடேக ஆராதனைகளும், உற்சவமும் நடைபெறும்

**சிறப்பு நிகழ்ச்சி**

சிவத்தமிழ்ச் சொல்லழகர்:-

திரு. ச. லலீசன்

(ஆசிரியர்: சோமாஸ்கந்தாக் கல்லூரி - புத்தூர்)

அவர்களால் "இந்துப் பண்பாட்டின் சிறப்பு" எனும் பொருள்பற்றி ஆன்மீகச் சொற்பொழிவும் இடம்பெறும்.

**இந்து தர்மம் எங்கும் வளர்க.**

அருள்மிகு செல்லக்கதிர்காம தேவஸ்தானம்

-நீர்வேலி-

(C/6090)



# உடன் தேவை

**கணனி பக்க அமைப்பாளர்கள்**

**(ஆண், பெண் இருபாலாரும்)**

சுயமாகத் தயாரித்த சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

வலம்புரி ஆளணி முகாமையாளர்


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.